அதிகரித்த போட்டியும் நுகர்வோருக்கும், தொடர்பூட்டல் துறைக்கும் பயனுடையதாக அமையும் அதே வேளையில், உட்கட்டமைப்புப் பணிகளை வழங்குவதில் தனியார்துறையின் ஈடுபாட்டினை ஊக்குவிப்பதற்காக சட்ட மற்றும், ஒழுங்கமைப்பு வரைச்சட்டமானது புலப்படுவதாகவும், பாரபட்சமற்றதாயும் அமைய வேண்டியது அவசியமாகும். நிறுவனரீதியான வரைச்சட்டம் வாடிக்கையாளர்களதும், பணிவழங்குவோரினதும் நலன்களைப் பாதுகாக்கும் விதத்தில் அமையவேண்டும்.

இலங்கை அரசு தனது கொள்கை விளக்கக்கூற்றில், உட்கட்டமைப்புத்துறையில் பரந்தளவில் தனியார்துறையின் பங்களிப்புக்கான தேவையை கொள்கையளவில் ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளது. அதில் கூறப்பட்டவாறு தனியார்துறை வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு அவசியமான தேவையாக வேண்டப்பட்ட உட்கட்டமைப்பினை உருவாக்குவதற்காக அரசதுறை முதலீடுகளினாலான குறைநிரப்பல் அவசியமாகும். எனினும் போதிய உட்கட்டமைப்பு வழங்கலுக்கான மூலவளத் தேவைப்பாடுகள் வியக்கத்தக்களவில் அதிகமாயிருப்பதனால், உட்கட்டமைப்பு முதலீட்டின் குறிப்பிடத்தக்க அளவானது தனியார்துறையினால் கையேற்கப்படவேண்டும். இது வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள், வலு, தொடர்பூட்டல், துறைமுகங்கள் போன்றவற்றிலான அரசதுறை உட்கட்டமைப்பு செலவுக்கான குறைநிரப்பை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தனியார்துறை உட்கட்டமைப்பு முதலீடுகட்கு கட்டி தொழிற்படுத்தி – உடமையாக்குதல் மற்றும் கட்டி தொழிற்படுத்து மாற்றல் செய்தல் என்பனபோன்ற ஒழுங்குகளின்கீழ் ஏற்படுத்தப்படும். (இலங்கை அரசின் கொள்கை விளக்கக் கூற்று 1995),

இவ்வாறு, தனியார்துறைப் பங்களிப்பானது முக்கியமாக கட்டி தொழிற்படுத்தி சொந்தமாக்குதல் கட்டி தொழிற்படுத்தி மாற்றல்செய்தல் என்ற ஒழுங்குகளின் அடிப்படையில் ஊக்குவிக்கப்பட வேண்டியதாகும். கட்டி தொழிற்படுத்தி மாற்றல்செய்தல் என்ற கொள்கையின்கீழ், தனியார் தொழில் முயற்சியாளர் ஒருவர், நிதியிடல், கட்டடவாக்கம், தொழிற்பாடு மற்றும் குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்கு அவ்வசதியைப்பேணலும் பின்பு அரசுக்கு மாற்றல் செய்யவும் இணங்குவதாயிருக்கையில் கட்டி தொழிற்படுத்து உடைமையாக்கு என்ற திட்டத்தின் கீழ் அவ்வசதியானது தனியார்துறை தொழில் முயற்சியாளரின் உடைமையாக்கப்படும். உட்கட்டமைப்புப் பணிகளை வழங்குவதில் தனியார்துறை பங்களிப்புச் செயல்முறையானது தற்போது மெதுவான ஆனால் உறுதியான முன்னேற்றத்தைக்காட்டியது. இச்செயல்முறைக்கான தீர்க்கமான அரசியல் கடப்பாடு ஏற்கனவே உறுதிசெய்யப்பட்டமையினால் முதலீட்டுப்போக்கில் குறிப்பாக பாதுகாப்பு நிலைமையில் பொதுவான முன்னேற்றமொன்று ஏற்படுமாயின் விரைவான முன்னேற்றம் ஏற்படும்.

வலுத்துறையைப் பொறுத்தவரையில் கட்டி–தொழிற்படுத்தி–உடைமையாக்கல்/கட்டி தொழிற்படுத்தி மாற்றல் செய்தல் ஆகியவற்றின்கீழ் பல செயற்றிட்டங்கள் பரிசீலனையின்கீழ் இருப்பதுடன், கட்டி தொழிற்படுத்தி, உடைமையாக்கல்/கட்டி தொழிற்படுத்தி, மாற்றல் செய்தல் அடிப்படையிலான (சபுகஸ்கந்தையிலுள்ள 51 மெகாவாட் டீசல் வலுபொறி) முதலாவது செயற்றிட்டத்துக்கான பேச்சு வார்த்தைகள் 1995 இறுதியில் நிறைவு செய்யப்பட்டன.

தொலைத் தொடர்பூட்டல்துறை பொருளாதாரத்தில் விரைந்து வளர்ந்துவரும் துறைகளில் ஒன்றாக உள்ளது தனியார்துறை தற்போது தொலைத்தொடர்பூட்டல் துறையிலுள்ள 6 முக்கிய துறைகளான வானொலி பேஜிங் பணிகள், / செலூலர் நடமாடும்தொலைபேசிப் பணிகள் / தரவுதொடர்பூட்டல் பணிகள் அட்டைத்தொலைபேசி, நடமாடும் வானொலி வலையமைப்பு அனுப்புப் பணிகள் தொலைதூர தொலைத்தொடர்பூட்டல் வலையமைப்பு ஆகியதுறைகளில் பங்குகொண்டிருந்தது. அதேவேளை மூன்று கம்பனிகள் அதிகரித்துச் செல்லும் கேள்வியை ஈடுசெய்வதற்காக 150,000 தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட செயற்றிட்டங்களில் முதலீடுசெய்தன. துறைமுகப்பணிகளை விரிவாக்குவதில் தனியார்துறைப் பங்களிப்பின் ஆரம்ப நடவடிக்கைகள் முற்றுப்பெற்றுள்ளன. காலித்துறைமுகத்தின் விரிவாக்க நடவடிக்கைகள் 1995 இல் தொடங்கின. தனியார்துறைப்பங்கேற்புடன் கொழும்புத் துறைமுகத்தை விரிவாக்குவது தற்பொழுது பரிசீலனையின்கீழ் உள்ளது. மின்வலு /வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகிய மற்றைய துறைகளில் தனியார் துறையின் பங்கேற்பு அண்மிய எதிர்காலத்தில் ஊக்குவிக்கப்படவேண்டியது அவசியமானதாகும்.

## 5.2. நலத்துறை

1995 இல் நலக் கொள்கையானது, நல ஊக்குவிப்பையும், நோய்த்தடுப்பினையுமே மையமாகக் கொண்டிருந்ததுடன், நடைமுறையிலுள்ள குணமாக்கல் பணிகளின் தரத்தை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. சுற்றுவட்ட பிரதேசத்தில் நலப்பணிகள் முன்னேற்றல், குறைவாகச் சேவை வழங்கப்பட்ட பகுதிகளுக்கும், வசதிகளைக் குறைவாகப் பெறும் மக்கள் தொகுதிக்கான நலப்பணிகளை மேற்கொள்ளல், நலக்கவனிப்பு வழங்கல் முறையில் கிராமிய நகர ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் ஆகியனவே முக்கிய நோக்கமாகும். மலேரியாக் கட்டுப்பாடு, ஏனைய தொற்று நோய்க்கட்டுப்பாடு, குழந்தைகளின் ஊட்டக் குறைவினை ஒழித்தல் என்பனவே சிறப்பாக முன்னுரிமை வழங்கப்பட்ட விடயங்களாகும். தேசிய நலச்சபை, தேசிய நலஅபிவிருத்திக்குழு ஆகியன கொள்கை இணைப்பு, கொள்கை நடைமுறைப்படுத்தல், நல அபிவிருத்தியை நிருவகித்தல் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தன.

1995 இல் நலத்துறை மீதான மொத்த மூலதனச் செலவு, இத்துறைக்கு அதிக மூலவளங்களை ஒதுக்கும் நோக்கில் அமைந்த அரசின் கொள்கையை எடுத்துக்காட்டும் வகையில் 19 சதவீதத்தால் விரிவடைந்து ரூ. 11 பில்லியனாக விளங்கியது. இவ்வதிகரிப்பில், 65 சதவீதம் மூலதன பேணல் நடவடிக்கைகள் மீது காணப்பட்டவேளையில் எஞ்சியது புதிய மூலதன முதலீடுகள் மீது காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நலத்துறைச் செலவு 1994 இன் 1.6 சதவீதத்திலிருந்து 1995 இல் 1.7 சதவீதத்துக்கு அதிகரித்தது. அதேபோல, அரச செலவினத்தில் அதன் பங்கு 1994 இற்கும் 1995 இற்கும் இடையில் சிறிதளவில் 5.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. நலத்துறை உள்ளமைப்பு வசதிகளின் பேணல் முக்கியமாகக் காணப்பட்டவேளையில் எதிர்காலத்தில் நவீன நலத்துறைப் பணிகளை வழங்குவதற்காக போதியளவு வசதிகளையும், மனித மூலவளங்களையும் இத்துறை கொண்டிருப்பதை உறுதிசெய்வதற்கு, நலத்துறைக்குள்ளான மூலவள ஒதுக்கில் சரியான கலப்பு முறையொன்று ஏற்படுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

நலத்துறை அமைச்சின்படி, 510 அரச வைத்தியசாலைகளில் ஆண்டு தோறும் 30 இலட்சத்துக்கு மேலான உள்நோயாளர்களும், 360 இலட்சத்துக்கு மேலான வெளிநோயாளர்களும் சிகிச்சை யளிக்கப்படுகின்றனர். 1995 இல் 1,000 ஆட்களுக்கான சராசரி படுக்கைகளின் எண்ணிக்கை 3 ஆக இருந்தது. குணமாக்கல் மற்றும் நோய்த்தடுப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கும் 1994 இன் 23 இலிருந்து 1995 இல் 25 இற்கு அதிகரித்த வேளையில் மருத்துவத்தாதிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கும் 73 ஆக நிலைத்திருந்தது. நலக் கவனிப்பு வழங்கலைப் பொறுத்தவரையில், கிராமிய மட்டத்திலும் சுற்றுவட்ட மட்டத்திலும் நலத்துறை வசதிகள் தொடர்ந்தும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமையும், நலக்கவனிப்பின் தரம் வீழ்ச்சியடைந்தமைக்கு வழிவகுத்த மூன்றாந்தர மற்றும் இரண்டாந்தர மட்டத்திலுள்ள வசதிகள் மிகையாக பயன்படுத்தப்பட்டமையே தொடர்ந்தும் முக்கியமான விடயங்களாக இருந்தன. இதனால் சமமாகப் பகிரப்பட்ட நல வசதிகளுடனான மிகவும் திறன்வாய்ந்த மாற்றல் பணிகள் முறைக்கான தேவை வலியுறுத்தப்பட்டது. நலத்துறை மனிதவலுவைப் பொறுத்தவரையில், சிறப்பு வைத்தியர்களுக்கான கடுமையான தட்டுப்பாடு தொடர்ந்தும் முக்கியமானதொரு குறைபாடாயிருந்தது. 1995 இல் கிடைக்கத்தக்கதாயிருந்த சிறப்பு வைத்தியர்களின் எண்ணிக்கை தேவைப்பட்ட மட்டத்தின் 40 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது.

தடுப்பு நலக்கவனிப்பு வசதிகளை ஊக்குவிப்பதற்காக, தொற்றுநோய்க்கட்டுப்பாடு, சுகாதார வசதிகளின் முன்னேற்றம், தொற்றுநோய்த் தடையினை மேற்பார்வை செய்தல், மற்றும் குடும்பநலம் ஆகியவற்றில் முக்கியமான கவனம் செலுத்தப்பட்டது. உலக சுகாதார நிறுவனத்தினால் (உசுநி) விதந்துரைக்கப்பட்ட புதிய உலக உத்திக்கிணங்க மலேரியாக் கட்டுப்பாட்டுத் திட்டமொன்று மீளமைக்கப் பட்டது. மலேரியாவைக் கட்டுப்படுத்துவதற்காக இடம்பெயர் சிகிச்சை நிலையங்கள் அறிமுகப் படுத்தப்பட்டமை, கூடிய ஆபத்துள்ள இடங்களிலான தொழிற்பாடுகள், விரைவான நோய்க் கண்டுபிடிப்பு நடவடிக்கைகள், தற்காப்பு முறைகளை ஊக்குவித்தல், நலத்துறைக் கல்வித் திட்டங்கள் ஆகியன 1995 இல் மலேரியா நோய் பரவுதலைப் (1994 இன் 273,433 ஆட்களிலிருந்து 1995 இல் 141,293 ஆட்களுக்கு) பெருமளவில் குறைந்தன. எஸ்ரிடி/எச்ஐவி/எயிட்ஸ் பற்றி மக்களை அதிகளவில் அறிந்துகொள்ளச் செய்வதற்கான பல திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டதுடன், சுற்றுவட்ட மட்டத்திலும் ஆரம்ப நலக் கவனிப்பு மட்டத்திலும் இப்பணிகள் விரிவாக்கப்பட்டன. போலியோ ஒழிக்கப்பட்ட நாடாக

**சிறப்புக் குறிப்பு 3**

## மனிதவள அபிவிருத்தி குறிகாட்டிகள்

மனிதவள அபிவிருத்தி அணுகுமுறையானது, அபிவிருத்திக்கான வரையறையைப் பொறுத்தவரையில் பொருளாதார வளர்ச்சிக்கான மரபுவழியான வழிமுறைகளைவிட பரந்த அளவிலான பரிமாணத்தைக் கொண்டதாகும். இவ்வணுகுமுறையின்படி, அபிவிருத்திக்கான இறுதியான இலக்கு, தற்போதைய தலைமுறை, அடுத்த தலைமுறை ஆகிய இரண்டுக்கும் கிடைக்கக்கூடிய சமூக மற்றும் பொருளாதாரத் தெரிவுகளை அதிகரிப்பதன்மூலம் மனித வளத்தை அபிவிருத்தி செய்வதேயாகும். அத்தகைய அபிவிருத்தியானது எல்லா மக்களையும் சென்றடைய வேண்டியதுடன், இச்செயல்முறையில் எவரும் விடுபடக்கூடாதென்பதையும் இது வலியுறுத்துகிறது. சமூகத்திலுள்ள எல்லாத் தனி மனிதர்களும் பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் அரசியல் துறைகளில் தமது திறமைகளை அதிகரிக்கவும் அவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்தவும் அபிவிருத்தியானது சமமான வாய்ப்பை வழங்கவேண்டியிருக்கையில் உறுதியான அடிப்படையில் அனைவருக்கும் நியாயமான வாழ்க்கைத் தரத்தை வழங்குவதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மனிதவள அபிவிருத்தி அணுகுமுறை, தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சியின் மரபுரீதியான அணுகுமுறை, மனித மூலவள அபிவிருத்தி அணுகுமுறை, நலன்புரி அணுகுமுறை, அடிப்படைத் தேவைகள் அணுகுமுறை போன்ற பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்க வரையறைகளிலிருந்து வேறுபடுகிறது. தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி அணுகுமுறை அவசியமாகக் காணப்பட்டாலும் மனிதவள அபிவிருத்திக்குப் போதியதல்ல. தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி விரைவாகக் காணப்பட்டபோதிலும் சமூகமொன்றில் மனிதவள அபிவிருத்தி குறைவாகக் காணப்படலாம். வருமானத்திலேற்பட்ட அதிகரிப்பானது முடிவொன்றாகக் காணப்படாததுடன், மனிதவள அபிவிருத்தியில் உயர்மட்டத்தையடைவதற்கான அல்லது வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்கான வழிமுறையாகக் காணப்பட்டது. மனிதமூலவள அபிவிருத்தி அணுகுமுறையானது மானிடரை இறுதி நன்மைபெறுவோராயில்லாமல் இச்செயல்முறையில் இவர்களுடைய தெரிவுகள் முன்னேற்றமடைந்து காணப்பட்டபோதிலும் பண்ட உற்பத்தியை அதிகரிப்பதற்கான முதற்காரணியாக அல்லது கருவியாகவோ அவர்களைக் கருதுகிறது. நலஅணுகுமுறை, மனிதவளத்தை பங்காளர்கள் என்பதைவிட நன்மை பெறுவோர் என்றே கருதுவதுடன் வழங்கல் கோட்பாட்டினையும் வலியுறுத்துகிறது. அடிப்படைத் தேவைகள் அணுகுமுறை அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்யக்கூடிய அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பணிகளின் தொகுதி வலுவான அடிப்படையில் எல்லோருக்கும் சென்றடையவேண்டியதை வலியுறுத்துகிறது. எனினும் உண்மையான அபிவிருத்தி என்பது வெறுமனே உயிர்வாழ்வது மட்டுமன்றி தெரிவுகள், மக்களின் வாழ்க்கைத்தரம் சமமான வாய்ப்புக்கள் ஆகியவற்றை அதிகரிப்பதிலேயே தங்கியுள்ளது. இது உற்பத்தி, வழங்கல் ஆகிய வாய்ப்புக்களை பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் அரசியல்துறைகளில் பங்குபற்றும் சந்தர்ப்பங்களை வலியுறுத்துவதன்மூலம் இணைந்தமுறையில் ஏற்படுத்தியது.

மனிதவள அபிவிருத்தி, பல விடயங்களை உள்ளடக்கிய போதிலும், கூடுதலான குறிகாட்டிகள் குழப்பமான ஒரு தோற்றத்தினைக் காட்டக்கூடியதாயிருக்குமாகையால் இவ்விடயங்கள் மூன்று முக்கிய மாறிலிகள் அல்லது குறிகாட்டிகளாக பின்வருமாறு சுருக்கியமைக்கப்பட்டன.

(அ) வாழ்வுக்காலம் - இது நல வசதிகளின் கிடைப்பனவு ஊட்டச்சத்து மட்டங்கள் போன்ற அபிவிருத்தியின் பல விடயங்களை உள்ளடக்குகின்றது.

(ஆ) கல்வி கற்றோர் வீதம் - அறிவு மற்றும் ஏனைய மனித மூலவள அபிவிருத்தி உள்ளீடுகளின் வாய்ப்புக்கள் தொடர்பிலானவை.

## அட்டவணை 1
## மனிதவள அபிவிருத்திச் சுட்டெண்ணும் ஏனைய சமூக குறிகாட்டிகளும்

| நாடு | வாழும் காலம் 1992 | வயது வந்தோர் கல்வி அறிவு வீதம் 1992 | தலைக்குரிய உண்மை மொ.உ.உ. இன் கொள்வனவு வலு சமப்பாடு டொலர்கள் 1992 | சீராக்கப்பட்ட தலைக்குரிய உண்மை மொ.உ.உ. 1992(அ) | மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் 1992 | மனிதவள அபிவிருத்தி நிலை கழித்த மொ.உ.உ. நிலை (ஆ) | ஒவ்வொரு 100 ஆட்களுக்கான தொலைக் காட்சிப் பெட்டிகள் 1992 | 1992 இல் ஒவ்வொரு 100 ஆட்களுக்கான தின செய்தித்தாள் பிரதிகள் 1992 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொறியக் குடியரசு | 71.1 | 97.4 | 9,250 | 5,249 | 0.882 | 7 | 21 | 41 |
| சிங்கப்பூர் | 74.8 | 89.9 | 18,330 | 5,344 | 0.878 | - 19 | 38 | 34 |
| தாய்லாந்து | 69.9 | 93.5 | 5,950 | 5,178 | 0.827 | - 3 | 11 | 7 |
| மலேசியா | 70.8 | 81.5 | 7,790 | 5,223 | 0.822 | - 14 | 15 | 12 |
| இலங்கை | 71.9 | 89.3 | 2,850 | 2,850 | 0.704 | 5 | 5 | 3 |
| பில்ப்பைன்ஸ் | 66.3 | 94.0 | 2,550 | 2,550 | 0.677 | 8 | 5 | 5 |
| இந்தோனேசியா | 62.7 | 82.5 | 2,950 | 2,950 | 0.637 | - 5 | 6 | 2 |
| பாக்கித்தான் | 61.5 | 35.7 | 2,890 | 2,890 | 0.483 | -28 | 2 | 1 |
| மியன்மார் | 57.6 | 82.0 | 751 | 751 | 0.457 | 29 | ... | 1 |
| இந்தியா | 60.4 | 49.9 | 1,230 | 1,230 | 0.439 | 7 | 4 | 3 |
| வங்காளதேசம் | 55.6 | 36.4 | 1,230 | 1,230 | 0.364 | - 5 | ... | 1 |
| நேபாளம் | 53.5 | 25.6 | 1,170 | 1,170 | 0.343 | - 25 | ... | 1 |

மூலங்கள் : மனிதவள அபிவிருத்தி அறிக்கை 1995
உலக அபிவிருத்தி அறிக்கை 1995

(அ) மனிதவள அபிவிருத்திச் சுடணெண்ணின் ஆண்டிற்குப் பயன்படுத்துவதற்காக சீராக்கப்பட்ட பெறுமதிகள்
(ஆ) மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் நிலை தலைக்குரிய மொ. தே. உற்பத்தி நிலையைவிட சிறப்பானது என்பதனை நேர்க்கணிய எண்தொகைகள் எடுத்துக்காட்டின. எதிர்க்கணியமென்பது எதிர்மறையானது.

## அட்டவணை 2
## தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளின் அடிப்படைப் பொருளாதார குறிகாட்டிகள்

| நாடு | மொ.உ.உ. வின் ஆண்டுச் சராசரிவீதம் | பணவீக்கத்தின் ஆண்டுச்சராசரி வீதம் 1980–93 | மொத்த உள்நாட்டு முதலீட்டின் ஆண்டுச்சராசரி வளர்ச்சி % 1983–93 | மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் (அ) | |
|---|---|---|---|---|---|
| | 1980 - 93 | 1980 - 93 | 1980 - 93 | 1987 | 1992 |
| கொரிய குடியரசு | 9.1 | 6.3 | 11.8 | 0.903 | 0.882 |
| சிங்கப்பூர் | 6.9 | 2.5 | 5.7 | 0.899 | 0.878 |
| தாய்லாந்து | 8.2 | 4.3 | 11.4 | 0.783 | 0.827 |
| மலேசியா | 6.2 | 2.2 | 6.3 | 0.800 | 0.822 |
| இந்தோனேசியா | 5.8 | 8.5 | 7.1 | 0.591 | 0.637 |
| இலங்கை | 4.0 | 11.1 | 2.4 | 0.789 | 0.704 |

மூலங்கள் : உலக அபிவிருத்தி அறிக்கை - 1995
மனிதவள அபிவிருத்தி அறிக்கை - 1995

(அ) 1992 இக்கான மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் கணிப்பீட்டுமுறையிலேற்பட்ட மாற்றங்கள் காரணமாக 1987 க்கும் 1992 க்குமுான தரவுகள் கண்டிப்பாக ஒப்பிடத்தக்கனவல்ல.

(இ) வருமான குறிகாட்டி - போதுமான வருமானம் வாழ்க்கையின் மேலும் பல தேவைகளுக்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்துகிறது. வருமானத்தின் உண்மையான மட்டத்தை மட்டுமன்றி அவ்வருவாயினால் பெறப்படக்கூடியவற்றையும், பிரதிபலிக்கும் வகையிலும் பன்னாட்டு ஒப்பீட்டில் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி, கொள்வனவுச் சக்திக்காகச் சீராக்கஞ்செய்யப்பட்ட ஐ. அ. டொலரிலும் எடுத்துக்காட்டப்பட்டது.

மேலே கூறப்பட்ட மூன்று மாறுபாடுகளினதும் அடிப்படையில் மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் கணிக்கப்பட்டதுடன் விரும்பத்தக்களவில் மனிதவள அபிவிருத்தி அடையப்பட்ட மட்டமும் காட்டப்பட்டுள்ளது.*

அதிகரித்த கல்வியறிவு அல்லது வாழ்க்கைக்காலத்தின் மூலமான மனிதவள அபிவிருத்தியானது அனைவருக்கும் நன்மைகளை வழங்குவதற்கான தேர்வுகளின் கிடைக்கும் தன்மையை உத்தரவாதம் செய்வதாக இருக்காது. உயர்கல்வியறிவு பெற்ற மக்கள் தொகையினரிடையே வேலையற்றோர் வீதம் மிக அதிகமாகக்காணப்படலாம். கல்வியறிவுடைய இத்தைகய ஆட்கள் பொருளாதார, சமூக அபிவிருத்திச் செயல்முறையில் பங்குபற்றுவதற்கான உரிமையைப் பயன்படுத்துவதில் ஆர்வத்தைக் காட்டிய போதிலும், அவ்வாறு செய்யமுடியாத நிலையிலிருக்கலாம். ஒருவரது கல்வியறிவைப் பயன்படுத்தும் ஆற்றல், கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் மற்றும், பொருளாதாரம் விரிவடையும்வீதம் ஆகியவற்றுக்குப் பொருத்தமான முறையில் அக்கல்வி அமைந்திருப்பதிலேயே தங்கியுள்ளது. மனிதவள அபிவிருத்தியில் அடையப்பட்டனவற்றின் உறுதியான தன்மை, நீண்டகாலத்தில் பொருளாதார வளர்ச்சியில் அடையப்பட்டவற்றில் தங்கியிருப்பதனால் சமமான பொருளாதார வளர்ச்சியானது, எந்த நாடும் தனது மக்கள் தொகையின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக அடையப்படவேண்டிய முக்கிய இலக்காக அமைகிறது. மனிதவள அபிவிருத்தி அரசியல் சுதந்திரம், தனியொருவரினால் அனுபவிக்கப்படும் மனித உரிமைகள், உணவுப்பாதுகாப்பு, சுற்றாடல்பாதுகாப்பு, தனியார்பாதுகாப்பு, இனப்பாதுகாப்பு, குற்றமிழைத்தல் மற்றும் உடல்ரீதியாக தீங்கிழைத்தல், போன்ற பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. வாழ்க்கையின் உடல் தகுதி வீடமைப்பும் அதன் தரமும் போன்ற மாறுபாடுகளிலும், தொடர்பூட்டல், போக்குவரத்து மற்றும் களியாட்டம் போன்ற தேவைக்குரிய வசதிகளிலும் தங்கியிருக்கலாம்.

இலங்கை தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்த வளர்ச்சியைக் கொண்டிருந்த போதிலும் மனிதவள அபிவிருத்தியில் சிறந்த ஒரு நாடாக அடிக்கடி எடுத்துக் காட்டப்படுகிறது. மனித அபிவிருத்தியில் இலங்கையினால் அடையப்பட்டவை 1940 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட நலன்புரிகொள்கையின் விளைவேயாகும்.

இந்தோனேசியா, மலேசியா, கொறியக் குடியரசு, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய விரைவாக வளர்ச்சியடையும் நாடுகளின் அனுபவங்கள் நியாயமான அளவிலான விலை உறுதிப்பாட்டுடன் இணைந்து தமது விரைவான பொருளாதார வளர்ச்சியைக் காட்டிமனித தெரிவுகளையும், மனிதவள அபிவிருத்தியையும் விரிவாக்கக்கூடிய பல விடயங்களிலான நன்மைகளைப் பெறுமளவில் அவற்றின் உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதிலும் முக்கியமான பங்கை வகித்தன. (அட்டவணை ஆ2) இலங்கையைப் பொறுத்தவரையில் 1973 க்கும் 1993க்கும் இடையில் ஏற்பட்டவாறு மனிதவள அபிவிருத்தி வீழ்ச்சியடையாமலிருப்பதையும் உறுதிப்படுத்துவதையும் விரைந்து வளர்ச்சியடையும் உலகளாவிய பொருளாதாரத்துடன் இணைந்து செல்லக்கூடிய தன்மையை ஏற்படுத்துவதையும் ஒரு சவாலாக எதிர்நோக்கியுள்ளது. முதலீட்டு வளர்ச்சியானது விரைவாக வளர்ச்சியடைந்து செல்லும் கிழக்கு ஆசியப் பொருளாதாரங்களில் காணப்படுவதுபோல உயர்மட்டத்தில் வலுப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த வேண்டிய அவசரமான தேவையொன்று காணப்படுகின்றது.

* விரும்பிய வாழ்வுக்காலமட்டமானது நீண்டகால சராசரி வாழ்வுக்காலமாக (85 ஆண்டுகள்) கருதப்படும். விரும்பிய கல்வியறிவு மட்டம் 100 சதவீதமாகக் கருதப்படுகிறது. சுட்டெண் கணிப்பீட்டில் ஆரம்ப, இரண்டாந்தர மூன்றாம்தர பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் இணைந்த விகிதங்களைக் கணக்கெடுப்பதிலிருந்தே இது பெறப்பட்டது. விரும்பிய வருவாய் மட்டமானது ஐ. நா. டொலர் நியதிகளில் நீண்டகாலத்தில் அடையத்தக்க ஆகக்கூடிய கொள்வனவுச் சக்திச் சமன்பாட்டு (கொசச) தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

## அட்டவணை 5.2

### அரச நலத்துறைப் பணிகள் 1991 - 1995

| | விடயம் | | 1991 | | 1992 | 1993 | 1994 | 1995* |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | மருத்துவ மனைகள் (மேற்கத்தைய மருந்து கையாள்பவை) | ... | 504 | | 506 | 504 | 510 | 510 |
| 2, | படுக்கைகள் | ... | 42,437 | (ஆ) | 48,061 | 48,949 | 50,091 | 54,641 |
| 3. | மத்திய மருந்தகங்கள் | ... | 275 | (ஆ) | 350 | 365 | 370 | 386 |
| 4. | மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 2,934 | (அ) | 3,345 | 3,713 | 4,047 | 4,580 |
| 5. | துணை மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 1,201 | (அ) | 1,253 | 1,305 | 1,357 | 1,324 |
| 6. | ஆயுர்வேத மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 12,852 | | 13,131 | 13,454 | 13,624 | 14,874 |
| 7. | மருத்துவத் தாதிமாரின் மொத்த எண்ணிக்கை | ... | 9,934 | (அ) | 11,214 | 11,818 | 13,060 | 13,310 |
| 8. | உடன் கவனிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 5,697 | | 5,710 | 5,772 | 5,469 | 5,579 |
| 9. | உள்நோயாளர்களின் எண்ணிக்கை ('000) | ... | 2,629 | (ஆ) | 3,023 | 3,174 | 3,204 | வி.கி. |
| 10. | வெளி நோயாளர்களின் எண்ணிக்கை ('000) | ... | 28,575 | (ஆ) | 36,827 | 36,892 | 35,276 | வி.கி. |
| 11. | மொத்த நலத்துறைச் செலவு (ரூ. ப. இ.) | ... | 5,229 | | 6,541 | 7,064 | 9,185 | 10,952 |
| | (அ) நடைமுறைச் செலவு (ரூ. ப. இ.) | ... | 4,110 | | 4,518 | 5,711 | 7,666 | 8,818 |
| | (ஆ) மூலதனச் செலவு (ரூ. ப. இ.) | ... | 1,119 | | 2,023 | 1,353 | 1,519 | 2,134 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) வடக்குக் கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக.

மூலங்கள் : நலத்துறை, நெடுஞ்சாலைகள், சமூகப் பணிகள் அமைச்சு,
சுதேச மருத்துவ அமைச்சு,
இலங்கை மத்திய வங்கி.

இலங்கையை உருவாக்கும் நோக்கில் 1995 இறுதியில் தேசிய தடுப்பு நாள் திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டது. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 95 சதவீதத்துக்கு மேற்பட்டோருக்கு தடுப்புமருந்து கொடுக்கப்பட்டதன் மூலம் இத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. அயடின் கலந்த உப்பு பாவனை பற்றிய அறிவையேற்படுத்தும் திட்டம் 1995 இல் மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வின் கீழான ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவிலான மூலவளங்கள், நலத்துறை உள்ளமைப்பின் விரிவுக்கும், புத்தாக்கத்துக்குமாக குறிப்பாக வெளிநாட்டு உதவிபெற்ற செயற்றிட்டங்களூடாக பயன்படுத்தப் பட்டன. ஆரம்ப நலக்கவனிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட இரண்டாவது நல குடித்தொகைச் செயற்றிட்டம் 1995 இலும் தொடர்ந்தது. இரு ஆதார வைத்தியசாலைகளை (கம்பகாவும், நீர்கொழும்பும்) அபிவிருத்தி செய்வதற்கும், கொறிய உதவியுடன், கொழும்பு தெற்கு வைத்தியசாலையையும் போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்குமான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. "லேடி றிச்வே சிறுவர்" வைத்தியசாலையை சீன உதவியுடன் அபிவிருத்தி செய்வதற்கான உடன்படிக்கையொன்று கையெழுத்திடப்பட்டது. அதேவேளையில், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொன்றாக ஆண்டுக்கு 25 வைத்தியசாலைகளை அவசர சிகிச்சைப் பிரிவுகள், ஆய்வுகூடங்கள், நலத்துறைக் கல்விப் பிரிவுகள், அம்புலன்சு வசதி ஆகிய வசதிகளுடன் அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பெருமளவில் கிராமிய மற்றும் சுற்று வட்ட மாவட்டங்களிலான கிட்டத்தட்ட 30 வைத்தியசாலைகள் ஆய்வின் கீழான ஆண்டில் தரமுயர்த்தப்பட்டன. முறிவு, காது, மூக்கு, தொண்டை மற்றும் குழந்தை சிகிச்சை என்பனவற்றுக்கான சத்திர சிகிச்சை வாட்டுகள், நுண்ணுயிரியல் பிரிவு ஆகியன 1995 இல் சிறி ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் மீண்டும் திறக்கப்பட்டன.

அதேவேளையில், நலத்துறையினில் தனியார் துறையின் பங்களிப்பு அண்மைய காலங்களில் விரிவடைந்திருந்தது. இது ஊக்கமளிக்கும் ஒரு அடையாளமாகக் காணப்பட்டவேளையில், தனியார்துறை, அரசதுறை இரண்டும் எதிர்காலத்தில் இலங்கையில் நலப் பணிகளை ஒன்றிணைந்து வழங்கும் எனக் கருத இடமுண்டு. இச்சந்தர்ப்பத்தில் நலத்துறையில், தனியார் துறையின் பங்களிப்பினை ஊக்குவிப்பதற்காக கொள்கைகளுடன், நலத் துறையிலான சமூக நலன்களை கூடிய அளவில் அளிப்பதற்கான இணைந்த அணுகுமுறையொன்று அவசியமாகும். கடந்த காலத்தில் அரச துறையிலிருந்தான தொகையான மூலவளங்களிலிருந்து தனியார்துறை நன்மையடைந்த வேளையில் தனியார் துறையானது தனது சொந்த நலத்துறை மனிதவலுவினைப் பயிற்றுவித்தல், நலக்காப்புறுதித் திட்டங்களை முன்னேற்றல் போன்றவற்றை சுதந்திரமாக அபிவிருத்தி செய்வதற்கு ஊக்குவிப்பது அவசியமாகும்.

## 5.3. கல்வி

மொத்த அரச செலவின் விகிதமாக கல்விச் செலவு 11 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பில் இச்செலவு 3.1 சதவீதத்திலிருந்து 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆனாலும் ரூபாய் பெறுமதியைக் கருத்திற் கொள்ளுமிடத்து கல்வி மீதான நடைமுறைச் செலவு 6 சதவீதத்தால் நடப்பாண்டில் அதிகரித்தது. பாடசாலைப் பாடப்புத்தகங்கள், இலவச சீருடைத்துணிகள் வழங்கல், பாடசாலைச் சிறுவர்களுக்கான போக்குவரத்து வசதிச் சலுகைகள் வழங்கல் போன்ற திட்டங்கள் இவ்வாண்டிலும் தொடர்ந்ததுடன் இவற்றுக்காக ரூ. 1.2 பில்லியன் கொண்ட தொகை செலவிடப்பட்டது. இதைவிட ரூ. 1.8 பில்லியன் இலவச மதிய போசன உணவிற்குப் பதிலாக வழங்கப்பட்ட உணவு முத்திரைகளில் செலவிடப்பட்டது. இப்புதிய திட்டமும் 1995 ஓகத்தில் நிறுத்தப்பட்டது.

1995 இல், பாடசாலைகளின் எண்ணிக்கை 53 ஆல் அதிகரித்தவேளையில் மாணவர்தொகை 23,063 ஆல் அதிகரித்துக் காணப்பட்டது. இதற்கமைய பாடசாலை ஒன்றுக்கான மாணவர் தொகை முன்னைய இரு ஆண்டுகளைப் போலவே 402 ஆக இருந்தது. 1995 இல் அரச கல்விச் சேவைக்கு 3,177 ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட போதிலும் மாணவர் - ஆசிரியர் விகிதம் முன்னைய ஆண்டைப்போல் 22 இல் நிலைத்திருந்தது.

பாடசாலை வசதிகளில் பிரதேச ரீதியிலான பரந்த வேறுபாடுகள் குறைந்த கல்வித்தரம் மற்றும் போதியதற்றதும், குறைந்த தரமானதுமான தொடக்கப் பள்ளி வசதிகள் ஆகியன குறிப்பாக கிராமியப் பகுதிகளில் காணப்படுமிடத்து இத்துறையில் கவனத்துக்குரிய முக்கிய விடயங்களாக விளங்கின. வெளிநாட்டு உதவியுடனான பல செயற்றிட்டங்கள் இவ்விடயங்களுக்காக தொடர்ந்தும் செயற்பட்டன. பிரதேச செயலாளர் (பிசெ) பிரிவிலுள்ள

## அட்டவணை 5.3

### பொதுக்கல்வி 1991 - 1995

| விடயம் | | 1991 | 1992 | 1993 | 1994 | 1995* |
|---|---|---|---|---|---|---|
| 1. பள்ளிக்கூடங்களின் மொத்த எண்ணிக்கை | ... | 10,520 | 10,588 | 10,710 | 10,779 | 10832 |
| அரச பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை | ... | 9,998 | 10,042 | 10,160 | 10,191 | 10,239 |
| தேசிய பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை | | 21 | 39 | 90 | 160 | 198 |
| ஏனைய பள்ளிக்கூடங்கள் | ... | 522 | 541 | 550 | 588 | 593 |
| தனியார் | | 459 | 478 | 487 | 509 | 514 |
| பிரிவேனா | | 63 | 63 | 63 | 79 | 79 |
| 2. மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 4,258,697 | 4,285,286 | 4,303,493 | 4,327,959 | 4,351,022 |
| அரச பள்ளிக்கூடங்கள் | ... | 4,135,114 | 4,155,035 | 4,172,897 | 4,193,971 | 4,216,571 |
| ஏனைய பள்ளிக்கூடங்கள் | ... | 123,583 | 130,251 | 130,596 | 133,988 | 134,451 |
| தனியார் | ... | 83,568 | 87,004 | 83,887 | 87,674 | 87,674 |
| பிரிவேனா | ... | 40,015 | 43,247 | 46,709 | 46,314 | 46,777 |
| 3. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் | ... | 388,315 | 359,003 | 354,390 | 339,006 | 342,386 |
| 4. ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 177,231 | 182,756 | 193,924 | 195,182 | 195,210 |
| அரச ஆசிரியர்கள் | ... | 170,735 | 175,813 | 186,926 | 187,937 | 187,574 |
| ஏனையோர் | ... | 6,496 | 6,943 | 6,998 | 7,596 | 7,636 |
| 5. மாணவர் / ஆசிரியர் விகிதம் | ... | 24 | 24 | 22 | 22 | 22 |
| 6. கல்வி மீதான மொத்தச் செலவினம் (ரூ. ப. இ) (ஆ) | ... | 9,129 | 12,541 | 14,070 | 17,713 | 18,908 |
| நடைமுறை | ... | 7,951 | 10,533 | 11,225 | 14,836 | 15,784 |
| மூலதன | ... | 1,178 | 2,008 | 2,845 | 2,877 | 3,124 |

* தற்காலிகமானவை

(அ) உயர்கல்வி மீதான அரசின் செலவையும் உள்ளடக்குகின்றது.

மூலங்கள் : கல்வி உயர்கல்வி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 5.4

### பல்கலைக்கழகக் கல்வி 1991 - 1995


| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 |
|---|---|---|---|---|---|
| 1. பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை | 9 | 9 | 9 | 9 | 10 (அ) |
| 2. மாணவர்களின் எண்ணிக்கை | 28,260 | 31,447 | 30,637 | 30,764 | 32,004 |
| 3. விரிவுரையாளர்களின் எண்ணிக்கை (ஆ) | 1,811 | 1,828 | 1,955 | 2,122 | 2,580 |
| 4. பட்டதாரிகளின் எண்ணிக்கை | 5,386 | 4,564 | 5,056 | 5,493 | வி.கி. |
| கலைகளும், கீழைத்தேச கற்கைகளும் | 1,983 | 1,603 | 1,661 | 2,077 | வி.கி. |
| வர்த்தகமும், முகாமைத்துவக் கற்கைகளும் | 1,096 | 769 | 1,169 | 1,044 | வி.கி. |
| சட்டம் | 98 | 89 | 112 | 183 | வி.கி. |
| அறிவியல் | 1,169 | 1,051 | 913 | 829 | வி.கி. |
| பொறியியல் | 355 | 379 | 382 | 652 | வி.கி. |
| மருத்துவம் | 339 | 334 | 444 | 385 | வி.கி. |
| பற்சிகிச்சை | 42 | 48 | 69 | 41 | வி.கி. |
| வேளாண்மை | 217 | 188 | 191 | 183 | வி.கி. |
| மிருகவைத்தியம் | 31 | 32 | 29 | 31 | வி.கி. |
| கட்டடவாக்கம் | 76 | 71 | 86 | 47 | வி.கி. |
| 5. முதல் பட்டங்களுக்கான புதிய அனுமதி | 6,463 | 8,970 | 8,900 | 7,849 | 9,649 |

(அ) 1995 இல் நிறுவப்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழகக் கல்லூரியையும் உள்ளடக்கும்.
(ஆ) ஆண்டின் தொடக்கத்தில்

மூலம் : பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு

தெரிந்தெடுக்கப்பட்ட ஆரம்ப பாடசாலைகளை முன்னேற்றுவதற்கும், விசேட தரப் பாடசாலைகளாக விருத்தி செய்வதற்குமான செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. 1995 இறுதியில் 278 ஆரம்பப் பாடசாலைகள் இச் செயற்றிட்டத்தின்கீழ் தரமுயர்த்துப் படுவதற்காக தெரிவுசெய்யப்பட்டன. மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஆரம்ப பாடசாலை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவர் நிலையத்தின் உதவியுடன் மற்றுமொரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கல்வித் தரத்தை உயர்த்துவதையும், பாடசாலை உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதையும், பாடசாலை முறையின் தொழிற்பாட்டுத் திறனை முன்னேற்றுவதையும் நோக்கமாகக் கொண்டு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு/உலக வங்கி ஆகியவற்றால் நிதியிடப்பட்ட செயற்றிட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடனான இரண்டாந்தர கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப் பட்டதுடன் 141 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு இவற்றில் 60 பாடசாலைகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் 1995 இறுதியில் ஆரம்பிக்கப்பட்டன. சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவர் நிலையத்தினால் நிதியிடப்பட்ட பெருந்தோட்டத்துறைக் கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டமும் இவ்வாண்டில் தொடரப்பட்டது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கல்வித் தரத்தை அதிகரிக்கும் முகமாக 38 பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டு, தேசியப் பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை 1995 இறுதியில் 1998 ஆக அதிகரிக்கப்பட்டது. இதேவேளையில், எல்லா முக்கிய உயர்தரப் பாடங்களின் பாடத்திட்டமும் தேசிய கல்வி நிறுவனத்தினால் திருத்தியமைக்கப்பட்டன. அத்துடன் கலை, வர்த்தகம் மற்றும் உயிரியல் விஞ்ஞான பாடநெறிகளுக்கான கணிதமும், வர்த்தக பாட நெறிக்கான வியாபார புள்ளிவிபரவியலும் ஆகிய இரு புதிய பாடங்கள் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. மாணவர்கள் புதிய தொழில்நுட்ப அறிவினைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் கிராமியப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் 12 கணனி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.



வரைபடம் 5.1
நலன்புரி, கல்வி மீதான செலவு

உயர்கல்விமுறை, பிரதேச ரீதியில் மேலும் பரவலாக்கப்படுவதற்காக மூன்று புதிய பல்கலைக் கழகங்கள் (ஒலுவில் என்னுமிடத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், அநுராதபுரத்தில் ரஜரட்ட பல்கலைக்கழகம், இரத்தினபுரியில் சப்பிரகமுவ பல்கலைக்கழகம்) 1995 இல் நிறுவப்பட்டன. இதனால் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை 1995 இல் 12 ஆக அதிகரித்ததுடன் ஆண்டொன்றுக்கு பல்கலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 1,500 இனால் அதிகரிக்கவும் உதவியது.

ஆய்வின் கீழான ஆண்டில் 9,649 புதிய மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப் பட்டதுடன் 1995 இறுதியில் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 32,004 ஆக அதிகரித்திருந்தது. பல்கலைக்கழக விரிவுரையாளர் தொகை 1994 இன் 2,122 இலிருந்து 1995 இல் 2,580 இற்கு அதிகரித்தது. இதன் விளைவாக, மாணவர், ஆசிரியர் விகிதம் 1994 இன் 12 இலிருந்து 1995 இல் 14 ஆக முன்னேற்றமடைந்தது. களனி பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் புதிய கல்விப் பீடங்களும் திணைக்களங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்ட மையினால் 1995 இல் மேலும் விரிவாக்கப்பட்டன. அதேவேளையில் இவ்வாண்டில் உதவிப் பணம் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 2,236 ஆல் அதிகரித்தது.

முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப் படவேண்டிய முக்கிய விடயங்களுள் ஒன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதி வசதிகளை வழங்குவதாகும். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு (பமாஆ), விடுதி வசதிகள் அமைப்பதை விரைவுபடுத்துவதற்காக கட்டடவாக்க முகாமை மதியுரைப் பிரிவு (கமுமபி) ஒன்றினை 1995 சனவரியில் நிறுவியது. கட்டடவாக்க முகாமை மதியுரைப் பிரிவு, 1996 இன் இறுதியில் பல்கலைக்கழக மாணவர்களில் 50 சதவீதமானோரை உள்ளடக்கும் வகையில் விடுதி வசதியை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் அடிக்கடி மூடப்பட்டமையாலும், 1988, 1989 ஆகிய பல்கலைக்கழக கலண்டர் ஆண்டுகளில் ஒழுங்கான கல்வி ஆண்டுகளில் ஏற்பட்ட இடையீடுகளினாலும் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்காகக் காத்திருக்க வேண்டிய காலப்பகுதி இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்டதன் விளைவாக, அவ்வாறு காத்திருக்கும் எஞ்சிய மாணவர் தொகையினைக் குறைக்கவேண்டியிருப்பதே கவனத்தில் எடுக்கப்படவேண்டிய மற்றுமொரு முக்கிய விடயமாகும். 1995 இல் சில பல்கலைக்கழகங்கள் மாணவர்களில் இரு தொகுதியினருக்கு அனுமதி வழங்கக்கூடிய தாயிருந்தமையால், எஞ்சிய மாணவர் தொகை குறிப்பிட்ட அளவுக்குக் குறைக்கப்பட்டது. எனினும் விரிவுரையாளர்களும் கட்டடவசதிகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைக்கக் கூடியதாயிருந்தமையினால் இச்செயல்முறை கட்டுப்பட்டது. மாணவர் பிரச்சினைகளினாலும், அலுவலர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளினாலும் 1995 இல் காலத்துக்குக் காலம் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டமையாலும் இந்நிலைமை மேலும் மோசமாகியது.

## 5.4. தொடர்பூட்டல் பணிகள்

1995 காலப்பகுதியில் அஞ்சல் திணைக் களத்தினால் கையாளப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு அஞ்சல் பொருட்களின் மொத்த எண்ணிக்கை சிறிதளவால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு உள்நாட்டு அஞ்சல் கையாளுகையில் பெரும்பாலும் முற்றாகப் பிரதிபலிக்கப்பட்டது. 1995 இல் உள்நாட்டுப் பொதி கையாளுகை 4 சதவீதத்தாலும், வெளிநாட்டுப் பொதி கையாளுகை 7 சதவீதத்தாலும் விரிவடைந்தன. இந்த அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஆண்டொன்றுக்கு வதிபவர் ஒருவருக்கான சராசரிக் கடிதங்களின் எண்ணிக்கை 29 ஆக மாற்றமின்றியிருந்ததுடன் விரைவுகூடிய தொடர்பூட்டல் முறைகளை நோக்கி மக்களின் கவனம் அதிகரித்துச் செல்லும் போக்கினையும் பிரதிபலித்தது.

ஐந்து முதன்மை அஞ்சல் அலுவலகங்கள், 29 துணை அஞ்சல் அலுவலகங்கள் 9 முகவர் அஞ்சல் நிலையங்கள் ஆகியன திறக்கப்பட்டமையினால் அஞ்சல் வலையமைப்பு 1994 இன் 4,105 அஞ்சல் அலுவலகங்களிலிருந்து 1995 இல் 4,148 அஞ்சல் அலுவலகங்களாக மேலும் விரிவடைந்தது. இதன் விளைவாக ஒரு அஞ்சல் அலுவலகத்தின் பணிக்குட்பட்ட சராசரி நிலப்பரப்பு 1994 இன் 16 சதுர கிலோ மீட்டர்களிலிருந்து 1995 இல் 15.8 சதுர கிலோ மீட்டர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளையில், உரு மாதிரிப்படப் பணிகளைக் கொண்ட அஞ்சல் அலுவலகங்களின் எண்ணிக்கை 1994 இன் 109 இலிருந்து 1995 இல் 159 ஆக அதிகரித்தது. மேலும் கொழும்பு நகருக்குள் கடுகதி அஞ்சல் பணிக்கும் (கஅப) விரைவு அஞ்சல் பணிக்குமான சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை விரிவாக்கப்பட்டது. புதிய மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தின் கட்டடவாக்க வேலை நிறைவு செய்யப்பட்டதுடன் இந்நிலையம் 1996 இல் ஆரம்பித்து வைக்கப்படும். அரசிற்கு உரிமையான

## அட்டவணை 5.5

### அஞ்சல், தொலைத் தொடர்பூட்டல் பணிகளின் வளர்ச்சி 1991 - 1995

| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. **அஞ்சல் பணிகள்** | | | | | |
| அஞ்சல் வழங்கும் பரப்புக்களின் எண்ணிக்கை ... | 6,729 | 6,729 | 6,729 | 6,729 | 6,729 |
| அஞ்சல் நிலைய பணிக்குட்பட்ட பரப்பு (ச.கி.மீ.) ... | 16.5 | 16.3 | 16.2 | 16.0 | 15.8 |
| அஞ்சல் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை ... | 3,982 | 4,018 | 4,042 | 4,105 | 4,148 |
| அரசு ... | 3,884 | 3,891 | 3,895 | 3,932 | 3,966 |
| தனியார் ... | 98 | 127 | 147 | 173 | 182 |
| ஒரு அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட மக்கள் தொகை ... | 4,331 | 4,331 | 4,359 | 4,365 | 4,393 |
| குடியிருப்பாளரொருவருக்கு கிடைக்கும் கடிதங்களின் எண்ணிக்கை .... | 29 | 27 | 28 | 29 | 29 |
| மொத்த அரசிறை (ரூ.ப.இ.) | 573 | 684 | 764 | 840 | 963 |
| நடைமுறைச் செலவினம் (ரூ.ப.இ.) | 865 | 987 | 1,036 | 1,397 | 1,441 |
| தொழிற்பாட்டு இழப்பு (ரூ.ப.இ.) | -292 | -303 | -272 | -557 | -478 |
| 2. **தொலைத் தொடர்பூட்டல் பணி** | | | | | |
| உள்நாட்டு தொலைபேசிப் பணி ... | | | | | |
| தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை ... | 125,834 | 135,504 | 157,774 | 180,724 | 204,350 |
| வழங்கப்பட்ட புதிய தொலைபேசி இணைப்புக்கள் ... | 6,579 | 10,607 | 22,270 | 25,322 | 24,556 |
| இணைப்புக்களை எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை .... | 61,313 | 96,207 | 124,066 | 186,245 | 237,800 |
| தொலைபேசிக்கான கேள்வி (எண்ணிக்கை) ... | 187,147 | 231,711 | 281,840 | 366,969 | 442,150 |
| தொலைபேசிகளின் பரம்பல் (ஒவ்வொரு 100 ஆட்களுக்கான தொலைபேசி) ... | 0.73 | 0.78 | 0.90 | 1.01 | 1.13 |
| கடல் கடந்த தொலைத் தொடர்பூட்டல் பணி ... | | | | | |
| ரெலெக்ஸ் இணைப்புக்களின் எண்ணிக்கை ... | 1,740 | 1,583 | 1,626 | 1,685 | 1,478 |
| எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை ... | 84 | 103 | 59 | 34 | 29 |
| வெளிச் செல்லும் தொலைத் தொடர்புகள் (எண்ணிக்கை) ... | | | | | |
| வெளிநாட்டு தொலைபேசித் தொடர்புகள் (ஆ) ... | 15,599,912 | 17,775,066 | 19,900,000 | 23,800,000 | 27,000.000 |
| வெளிநாட்டுத் தந்திகள் (இ) ... | 2,465,682 | 2,483,002 | 2,220,000 | 2,201,448 | 1,948.861 |
| வெளிநாட்டு ரெலெக்ஸ் தொடர்புகள் (ஆ) ... | 4,346,467 | 4,230,994 | 3,300,000 | 2,625,092 | 1,932.045 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) எண் தொகைகள் நிமிடங்களின் எண்ணிக்கைகளில் தரப்பட்டுள்ளன.
(இ) எண் தொகைகள் சொற்களின் எண்ணிக்கைகளில் தரப்பட்டுள்ளன.

மூலங்கள் : அஞ்சல் திணைக்களம்,
சிறிலங்கா ரெலிகொம்.

தபால் சேவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் 1995 இல் 58 சதவீதத்தால் அதிகரித்தது. அதேவேளையில் 1995 இற்கான தொழிற்பாட்டுச் செலவு 12 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வாறாக 1995 இற்குரிய தொழிற்பாட்டு இழப்புக்கள் ரூ. 2,330 இலட்சமாக முன்னைய ஆண்டின் ரூ. 5,570 இலட்சத்தை ஒப்பிடுமிடத்துத் தெளிவாக கட்டுப்படுத்தப்பட்டன.

இயலளவு மற்றும் வழங்கிய பணிகளைப் பொறுத்தவரையில் தொலைத் தொடர்புத் துறையின் செயலாற்றம் முன்னேற்றமடைந்திருந்தது. தொலைபேசிகளுக்கான அதிகரித்துச் செல்லும் தேவைக்கு ஈடுகொடுத்தலும், தற்போதுள்ள பணியின் தரத்தை உயர்த்துவதுமே தொலைத் தொடர்புத் துறை எதிர்நோக்கிய முக்கிய சவால்களாகும். வலையமைப்பில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதில் தனியார் துறையானது விரிவான பங்கை வகித்த வேளையில், இலங்கை ரெலிகொம் (சிறிலரெ) நடைமுறையிலுள்ள தொலைத் தொடர்பு வலையமைப்பை விரிவுபடுத்துவதிலும் தரம் உயர்த்துவதிலும் முக்கிய பங்கை வகித்தது.

1995 இல் சிறீலங்கா ரெலிகொம்மினால் நிறைவு செய்யப்பட்ட செயற்றிட்டங்களாவன, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட நெடுந்தூர கடத்தி, வலையமைப்புச் செயற்றிட்டம், உலக வங்கியினால் நிதியிடப்பட்ட, கொழும்புக்கும் துணை நகரங்களுக்குமான உள்ளூர் பரிவர்த்தனை நிலையங்களும் இவைக்கான துணைக் கருவியும் வழங்கலும் வெளிநாட்டு பொருளாதாரக் கூட்டு நிதியத்தினால் (வெபொகூநி) நிதியிடப்பட்ட கொழும்பு பெரும்பாக தொலைத் தொடர்பு வலையமைப்பு முன்னேற்றச் செயற்றிட்டம் (கொபெதொவமுசெ) தொகுதி I உம் II உம் வரையறுக்கப்பட்ட பினிகிய ஏற்றுமதி கொடுகடன் நிறுவனத்தினால் நிதியிடப்பட்ட மாத்தறையிலுள்ள உள்நாட்டு வெளிநாட்டுப் பொறிகளை முன்னேற்றுதல் என்பனவாகும். இச்செயற்றிட் டங்களினால் சிறிலங்கா ரெலிகொம் தனது பணிகளை விரிவடையச் செய்வதுடன் நவீன மயமாக்கியும் கொண்டது. மாதம்பேயிலும் தம்புள்ளவிலும் புதிய எண்முறை தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்களும், மாத்தறை கம்பகா மாவட்டத்திலும் புதிய தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்களும் இவ்வாண்டில் செயற்படத் தொடங்கின. இந்த அபிவிருத்திகளுடன் சிறிலங்கா ரெலிகொம், 1995 ஆம் ஆண்டில் தனது முடுக்கி இயலளவினை 9 சதவீதத்தால் 258,000 இணைப்புக்களுக்கு விரிவாக்கியது. அதேவேளையில் புதிய பன்னாட்டு பரிவர்த்தனை நிலையமொன்றும், புதிய செய்மதித் தொடர்பு நிரைநிலையமொன்றும் பாதுக்கையில் ஆரம்பிக்கப்பட்டதுடன் பன்னாட்டு தொலைத் தொடர்புப் பணியின் தரம் அதிகரிக்கப்பட்டது.

சிறிலங்கா ரெலிகொம், அழைப்பை அனுப்பும் வசதிகள், முன்னரே ஒதுக்கப்பட்ட இலக்க வசதிகள் இன்டர் நெற் பணிகள் போன்ற துணை வசதிகளையும் 1995 இல் அறிமுகப்படுத்தியது. மேலும் வர்த்தக நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்காக இணைப்பு தரவு வரையமைப்பும் 1995 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொலைபேசி பணிகளுக்கான தேவை 1994 இல் பதிவுசெய்யப்பட்ட 30 சதவீத வளர்ச்சியுடனொப்பிடுகையில் 1995 இல் 21 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 1995 இல் பொதுமக்களுக்கு 24,556 புதிய இணைப்புக்கள் வழங்கப்பட்டன. எனினும் மொத்தத் தேவையில் 46 சதவீதமானவற்றை மட்டுமே (204,350 தொலைபேசி இணைப்புக்கள்) சிறிலங்கா ரெலிகொம் நிறைவுசெய்யக்கூடியதாக இருந்தது. இதன் விளைவாக, இணைப்புக்கள் பெறுவதற்குக் காத்திருப்போரின் எண்ணிக்கை 1994 இன் 186,000 இலிருந்து 1995 இறுதியில் 237,800 ஆக அதிகரித்தது. தொலைபேசிச் செறிவு அல்லது 100 ஆட்களுக்கான தொலைபேசிகளின் எண்ணிக்கை 1994 இன் 1.01 இலிருந்து 1995 இல் 1.13 இற்கு சிறிதளவால் அதிகரித்தது. இப்பிரதேசத்திலுள்ள விரைவாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் கிடைக்கக் கூடியதாகவுள்ள வசதிகளுடனொப்பிடின் இது மிகவும் குறைவாகும்.

1995 இல் தொலைத் தொடர்புத்துறையில் புதிய தொழில் நுட்பத்தை கையாளுவதிலும், பணியின் தரத்தை உயர்த்துவதிலும் தனியார்துறை முக்கிய பங்கினை வகித்தது. றேடியோ பேஜிங் பணிகள் செலூலர் இடம்பெயர் தொலைபேசிகள், தரவுத் தொடர்பு, கட்டண தொலைபேசிகள். மொபைல் ட்ரங்குன் ரேடியோ வலையமைப்பு, அனுப்பல் பணிகள் வலையமைப்பு, ட்ரங் தொலைத் தொடர்பு வலையமைப்பு போன்ற ஆறு முக்கிய பெறுமதி கூட்டப்பட்ட பணிகள் 1995 இல் தனியார்துறையினால் வழங்கப்பட்டன. பேஜிங் பணிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஐந்து கம்பெனிகள் 9,565 பேஜிங் பொறிகளை வழங்கின. மூன்று கம்பெனிகளால் வழங்கப்பட்ட செலூர் தொலைபேசிகளின் எண்ணிக்கை 1995 இல் 76 சதவீதத்தால் அதிகரித்து 51,316 ஆக விளங்கி தொலைபேசிகளுக்கான தேவைகளின் அழுத்தத்தைக் குறைத்தன. 1995

இறுதியில் மூன்று கம்பனிகளால் 1,597 கட்டணத் தொலைபேசிகள் நிறுவப்பட்டதுடன் முன்னைய ஆண்டைவிட 76 சதவீதங்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தன. அதேவேளையில் வரையறுக்கப்பட்ட சிறிலங்கா ரெலிகொம் பணிகள், விரைவாக அதிகரித்துச் செல்லும் தொலைபேசிப் பணிகளுக்கான தேவையை முழுநாட்டையும் உள்ளடக்கும் வகையில் நிறைவு செய்யும் பொருட்டு 150,000 இணைப்பு தொலைத் தொடர்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தினை (150 கே செயற்றிட்டம்) நடைமுறைப்படுத்தியது. 1995 இல் ஏழு கம்பனிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதுடன், கண்டி மாவட்டத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும் இச்செயற்றிட்ட வேலைகள் முன்னேறிக் கொண்டிருக் கின்றன.

மரபு ரீதியான, பன்னாட்டு தொடர்பூட்டல் முறைகளுக்குப் பதிலாக பன்னாட்டு நேரடித் தொலைபேசி வசதிகள் செறிவான முறையில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டன. வெளிநாட்டு தொலைபேசிப் போக்குவரத்து (நிமிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில்) 1995 இல் 13 சதவீதத்தால் அதிகரித்தது. வெளிநாட்டுத் தந்திகள் சொற்களின் எண்ணிக்கையினால் அளவிடுகையில் 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. ஏனைய கவர்ச்சிகரமான இலத்திரன் தொடர்பு ஊடங்கள் கிடைக்கக்கூடிய தாயிருந்தமையால் வெளிநாட்டு ரெலெக்ஸ் போக்குவரத்து 26 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## 5.5. வலு

முன்னைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்குகளைத் தொடர்ந்து வலுவுக்கான கேள்வி 1995 இல் 10 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. எனினும், வலு உற்பத்தித் திறன் தொடர்ந்தும் மூன்றாவது ஆண்டாக மாற்றமின்றியிருந்தது. முன்னைய ஆண்டுகளைப் போல தேவையின் பெரும்பகுதி நீர்மின் வலுமூலம் நிறைவுசெய்யப்பட்டது. 1995 இல் நீர் மின்வலு உற்பத்தி ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் நிலவிய வரட்சியான காலநிலை நிலைமைகளினால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டபோதிலும் ஆண்டின் கடைசிப் பகுதியில் கணிசமான முன்னேற்றமொன்று ஏற்பட்டது. எனினும் ஆண்டின் கடைசிப் பகுதிவரையிலும் வடகீழ் பருவக் காற்று வீசாத காரணத்தால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறிப்பிடத்தக்களவில் வீழ்சியடைந்து நீர்மின் உருவாக்கத்தை மீண்டும் கட்டுப்படுத்தியது. பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வி முன்னைய ஆண்டைப்போல 1995 இலும் குறிபிடத்தக்களவில் விரிவடைந்தது. தன்னியக்க டீசல், பாரடீசல், மண்ணெண்ணெய் என்பனவற்றின் நுகர்வில், உயர் வளர்ச்சி வீதங்கள் அவதானிக்கப்பட்டன. அதேவேளையில், கொலன்னாவ, உருகொடவத்தை எண்ணெய் தாங்கிகளில் பயங்கரவாதிகளின் தாக்குதலால் ஏற்பட்ட சேதம் எண்ணெய் களஞ்சியப்படுத்தும் வசதிகளின் ஒருபகுதியைப் பாதித்ததுடன், ஒற்றோபர் மாதத்தில் சில நாட்களுக்கு வழங்கல் தட்டுப்பாட்டையும் ஏற்படுத்தியது. சேதமடைந்த வசதிகளை மீளமைப்பதற்கு ஐ. அ. டொலர் 300 இலட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.


வர்த்தகமல்லா வலு மூலங்கள், முக்கியமாக எரிபொருளும் மரமும் 1995 இல் தொடர்ந்தும் முக்கிய வலு மூலங்களாக விளங்கி, மொத்த வலுத்தேவையில் கிட்டத்தட்ட 70 சதவீதத்தை வழங்கின. பெற்றோலியம் (24 சதவீதம்) மின்வலு (5 சதவீதம்) திரவப் பெற்றோலிய வாயு (1 சதவீதம்) ஆகிய வர்ததக வலு மூலங்கள் எஞ்சிய பாகத்துக்கு வகைகூறின.

வலுத்துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகள், குறிப்பாக விரைவாக வளர்ச்சியடையும் கேள்வியானது வலுவின் உட்கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கான அவசரத் தேவையையும், வலுவினைச் சேமிப்பதற்கான வலுவான திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தலையும் வேண்டிநிற்கின்றன. தற்போதுள்ள இயலளவினை உயர்ந்த மட்டத்தில் பயன்படுத்துவதும் அது கட்டுப்படுத்த முடியாத காரணிகளால் பாதிக்கப்படுவதும், வலு உருவாக்க இயலளவில் விரிவொன்றினை ஏற்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் மிக அண்மைக் காலத்தில் வலு குறைவு ஏற்படக்கூடிய வாய்ப்புஇருப்பதையே உணர்த்துகிறது. பல தனியார் துறை வலு செயற்றிட்டங்கள் 1995 இல் கவனத்துக்கெடுக்கப்பட்டவேளையில், கட்டு, சொந்தமாக்கு, தொழிற்படுத்து /கட்டு தொழிற்படுத்து, மாற்று என்ற ஒழுங்குகளின் கீழான ஒரு செயற்றிட்டம் (சபுகஸ்கந்த வலு செயற்றிட்டம்) கலந்துரையாடலின் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

### மின்வலு

மின்வலுவின் நிறுவப்பட்ட மொத்த இயலளவு 1,409 மெகாவாட்டுக்களாக விளங்கி (மெவா) 1,137 மெகாவாட்டுக்கள் கொண்ட நீர்மின் வலுவையும், 272 மெகாவாட்டுக்கள் கொண்ட வெப்ப வலுவையும் உள்ளடக்கி 1992 இலிருந்து எதுவித மாற்றமு மின்றியிருந்தது. எனினும், இலங்கை மின் சபையினால்

வரைபடம் 5.2
முக்கிய வலு மூலங்கள்




உற்பத்தி செய்யப்பட்ட மொத்த வலு 1994 இன் 3,364 கிகாவாட் மணித்தியாலங்களிலிருந்து (கிவாம) 1995 இல் 4,786 கிகாவாட் மணித்தியாலங்களாக விளங்கி 10 சதவீதங்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தது. கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்த வலு உற்பத்தி சராசரியாக 10 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 1995 இன் முதல் நான்கு மாதங்களிலும் 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த நீர் மின்வலு உற்பத்தி கடைசி எட்டு மாதங்களிலும் 20 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் வகையில், 1995 இல் நீர்மின்வலு உற்பத்தி, முன்னைய ஆண்டின் 8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 11 சதவீதத்தால் அதிகரித்து 4,517 கிவாம ஆக விளங்கியது. 1995 இன் முற்பகுதியில் நீர்மின்வலு வழங்கலில் காணப்பட்ட குறைவின் விளைவாக முன்னைய ஆண்டின் 272 கிவாம உடன் ஒப்பிடின் 269 கிவாம கொண்ட வெப்ப மின்வலு உற்பத்தி செய்யப்பட்டது. வெப்பமின்வலு உற்பத்திக்கான எரிபொருள் செலவு 1994 இன் ரூ. 8,010 இலட்சத்துடன் ஒப்பிடின் 1995 இல் ரூ. 9,030 இலட்சமாகக் காணப்பட்டது. அதேவேளையில், வலுஉற்பத்தி, வழங்கல் மற்றும் கடத்தலின்போது ஏற்பட்ட இழப்புக்கள் 1994 ஐப் போலவே மொத்த வலு உற்பத்தியில் 18 சதவீதமாக மதிப்பிடப்பட்டது. பல கடத்தல் மற்றும் வழங்கல் வலையமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் இவ்வாண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. 1994 இல் லங்கா எலக்ரிக் கொம்பனி (லஎகொ) உள்ளூர் வழங்கல் வலையமைப்பில் ஏற்பட்ட அமைப்பு இழப்புக்களைக் குறைக்கும் நோக்குடனான

## அட்டவணை 5.6

## வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1991 – 1995

| விடயம் | அலகு | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | சதவீத மாற்றம் 1994 | சதவீத மாற்றம் 1995 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1. பெற்றோலிய உற்பத்திகள்** | | | | | | | | |
| ஏற்றுமதிகளின் அளவு | மெ. தொ. | 523 | 410 | 590 | 612 | 616 | 4 | 1 |
| ஏற்றுமதிகளின் பெறுமதி | ரூ. ப. இ. | 3,289 | 2,771 | 3,801 | 3,959 | 4,374 | 4 | 10 |
| | சிஎஉ. ப. இ. | 58 | 45 | 57 | 56 | 56 | -1 | 0 |
| இறக்குமதிகளின் அளவு | | | | | | | | |
| மசகெண்ணெய் | மெ. தொ. | 1,626 | 1,297 | 1,800 | 1,898 | 1,8605 | 5 | -2 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | ,, | 219 | 662 | 294 | 288 | 562 | -2 | 95 * |
| திரவப் பெற்றோலிய வாயு | ,, | 18 | 31 | 38 | 50 | 66 | 32 | 32 |
| இறக்குமதிகளின் பெறுமதி (கொ. க) | | | | | | | | |
| மசகெண்ணெய் | ரூ. ப. இ. | 9,667 | 7,667 | 11,222 | 11,407 | 12,362 | 2 | 8 |
| | சிஎஉ. ப.இ | 171 | 124 | 167 | 161 | 159 | -3 | -1 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | ரூ. ப. இ. | 2,567 | 5,526 | 2,554 | 2,442 | 4,812 | -4 | 97 |
| | சிஎஉ. ப. இ. | 45 | 90 | 38 | 35 | 62 | -9 | 77 |
| திரவப் பெற்றோலிய வாயு | ரூ. ப. இ. | 239 | 495 | 545 | 704 | 1,121 | 29 | 59 |
| | சிஎஉ. ப.இ. | 4 | 8 | 8 | 10 | 14 | 23 | 40 |
| மசகெண்ணெயின் சராசரி விலை (கொ. க) | ரூ/பீப்பா | 807 | 803 | 843 | 805 | 903 | -4 | 12 |
| | ஐ.அ.டொ/பீப் | 19.50 | 18.32 | 17.47 | 16.22 | 17.59 | -7 | 8 |
| உள்நாட்டு விற்பனைகள் . | மெ. தொ. | 1,240 | 1,487 | 1,418 | 1,568 | 1,721 | 11 | 10 |
| சிறப்புப் பெற்றோல் | .. | 160 | 165 | 173 | 184 | 190 | 6 | 3 |
| தன்னியக்க டீசல் | ,, | 540 | 606 | 666 | 728 | 796 | 9 | 9 |
| பார டீசல் | ,, | 33 | 125 | 18 | 54 | 80 | 199 | 48 |
| சிறப்பு டீசல் | ,, | 20 | 23 | 23 | 24 | 27 | 5 | 11 |
| மண்ணெண்ணெய் | ,, | 173 | 189 | 192 | 207 | 222 | 8 | 7 |
| உலை எண்ணெய் | ,, | 204 | 252 | 220 | 228 | 238 | 4 | 4 |
| அவுட்டூர் | ,, | 73 | 82 | 73 | 79 | 91 | 8 | 15 |
| ஏவி வாயு | ,, | ... | ... | ... | ... | ... | - | - |
| திரவப் பெற்றோலிய வாயு | ,, | 37 | 45 | 53 | 64 | 77 | 22 | 20 |
| உள்நாட்டு விலை | | | | | | | | |
| சிறப்புப் பெற்றோல் | ரூ/லீற்றர் | 30.00 | 33.00 | 35.00 | 35.00 | 40.00 | - | 14 |
| தன்னியக்க டீசல் | ,, | 11.00 | 11.65 | 12.20 | 11.40 | 12.40 | -7 | 9 |
| பார டீசல் | ,, | 10.60 | 11.15 | 11.60 | 10.70 | 11.70 | -8 | 9 |
| சிறப்பு டீசல் | ,, | 13.00 | 14.55 | 15.00 | 14.20 | 15.20 | -5 | 7 |
| மண்ணெண்ணெய் | ,, | 8.80 | 8080 | 11.80 | 9.50 | 9.50 | -19 | - |
| உலை எண்ணெய் | ,, | | | | | | | |
| 500 செக்கண்ட் | ,, | 6.55 | 7.10 | 7.10 | 7.10 | 7.10 | - | - |
| 800 செக்கண்ட் | ,, | 6.25 | 6.80 | 6.80 | 6.80 | 6.80 | - | - |
| 1000 செக்கண்ட் | ,, | 5.95 | 6.50 | 6.50 | 6.50 | 6.50 | - | - |
| நிலக்கீல் | ,, | 10.90 | 15.15 | 15.15 | 15.15 | 15.15 | - | - |
| திரவப் பெற்றோலிய வாயு | ரூ./ கி. கி. | 16.54 | 16.54 | 20.00 | 19.23 | 19.23 | -4 | - |
| **2. மின் வலு** | | | | | | | | |
| நிறுவப்பட்ட இயலளவு | மெ. வா. | 1,289 | 1,409 | 1,409 | 1,409 | 1,409 | - | - |
| நீர் மின் | .. | 1,017 | 1,137 | 1,137 | 1,137 | 1,137 | - | - |
| வெப்ப மின் | ,, | 272 | 272 | 272 | 272 | 272 | - | - |
| உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் | கி. வா. ம. | 3,376 | 3,540 | 3,979 | 4,364 | 4,786 | 10 | 10 |
| நீர் மின் | .. | 3,116 | 2,900 | 3,796 | 4,089 | 4,517 | 8 | 10 |
| வெப்ப மின் | ,, | 260 | 640 | 183 | 275 | 269 | 50 | -2 |
| மொத்த விற்பனைகள் | கி. வா. ம. | 2,742 | 2,916 | 3,270 | 3,565 | 3,915 | 9 | 10 |
| வீடு | ,, | 644 | 704 | 826 | 928 | 1,034 | 12 | 11 |
| கைத்தொழில் * * | ,, | 958 | 1,058 | 1,224 | 1,413 | 1,527 | 15 | 8 |
| வர்த்தகம் | ,, | 547 | 581 | 641 | 575 | 631 | -10 | 10 |
| உள்ளூராட்சி மன்றங்கள் | ,, | 572 | 544 | 536 | 609 | 683 | 14 | 12 |
| தெரு விளக்குகள் | ,, | 21 | 29 | 43 | 40 | 40 | -7 | - |

* தற்காலிகமானவை

* * 1994 பெப்புருவரி தொடக்கம் உணவகங்களுக்கான மின் விற்பனையும் அடங்கியுள்ளது.

மூலங்கள் : இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை மின்சபை,
வரையறுக்கப்பட்ட கொழும்பு வாயு கம்பனி,
வரையறுக்கப்பட்ட லங்கா மரைன் சேவிசஸ் (பிறைவேட்)

இரு செயற்றிட்டங்களை நிறைவுசெய்தது. இவ்விடயங்கள் கடுமையான கவனத்துக்கெடுக்கப்பட வேண்டியவையாயிருந்த போதிலும் ஆண்டொன்றுக்கு ரூ. 32,450 இலட்சமாக மதிப்பிடப்பட்ட உயர் அமைப்பு இழப்புக்கள் (18 சதவீதம்) தொடர்ந்தும் காணப்பட்டன.

கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட, மின்வலுத்தேவையில் காணப்பட்ட, மேல்நோக்கிய போக்கினைத் தொடர்ந்து 1995 இல் இலங்கை மின்சபையின் மொத்த மின் விற்பனைகள் 10 சதவீதத்தால் அதிகரித்தன. வீட்டுப்பாவனைப் பிரிவுக்கான கேள்வி 11 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு, கிராமிய மின்னூட்டல் திட்டங்களின் விரிவினால் வீட்டுப்பாவனையாளர்களது எண்ணிக்கை 13 சதவீதத்தினால் (12.21 இலட்சத்திலிருந்து 13.8 இலட்சம்) அதிகரித்தமையே காரணமாகும். கைத்தொழில் மற்றும் வர்தகத்துறைகளுக்கான விற்பனைகள் முறையே 8 சதவீதத்தாலும் 10 சதவீதத்தாலும் அதிகரித்து விரிவடைந்துசெல்லும் பொருளாதார நடவடிக்கை களைப் பிரதிபலித்தன. லங்கா எலக்ரிக் கம்பனியின் விற்பனைகள் 13 சதவீதத்தால் விரிவடைந்தமைக்கு வீட்டுத் துறைக்கான அதிகரித்த கேள்வியே பெருமளவு காரணமாகும். லங்கா எலக்ரிக் கம்பனியினால் மின்வசதி பெற்ற நுகர்வோரின் மொத்த எண்ணிக்கை 1995 இல் 7 சதவீதத்தால் அதிகரித்து 254,000 ஆக விளங்கியது.

மின்வலு தீர்வைகள் 1995 இல் மாற்றமின்றியிருந்தன. வீட்டுத்துறையானது தொடர்ந்தும் கைத்தொழில் மற்றும் வர்த்தக முயற்சியாளர்களினால் உதவுதொகையளிக்கப்பட்டது. மின்வலுவின் வேறுபடுத்தப்பட்ட விலையிடற் கொள்கை ஒரு கூறுக்கான உற்பத்திச் செலவைவிட உயர்வான முழுமையான சராசரி விலையொன்று கிடைப்பதனை உறுதிசெய்தது. விலையமைப்பானது வர்த்தக ரீதியில் வாய்ப்பான தன்மையை உறுதிப்படுத்தவும், நீண்டகாலத்தில் விரிவடையக் கூடிய பணியை ஏற்படுத்தவும் அவசியமாகக் கருதப்படும் 8 சதவீதங்கொண்ட வருவாய் வீதத்தை உருவாக்கவில்லை. ஆகவே மின்வலுக் கட்டணங்கள் 1996 சனவரியிலிருந்து உயர்த்தப்படவிருந்தன.

1995 இல் இலங்கை மின்சபை மின்வலு உட்கட்மைப்பை விரிவுபடுத்துதல், புத்தாக்கம், தரமுயர்த்தல் ஆகியவற்றுக்காக ரூ. 2 பில்லியன்கொண்ட தொகையை முதலீடு செய்தது. முக்கிய செயற்றிட்டங்கள் மீதான மொத்த முதலீட்டில் 60 சதவீதமான பங்கு வலு வழங்கல் மற்றும் கடத்தல் வலையமைப்பின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்துக்கும் செலவிடப் பட்டது. இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய செயற்றிட்டங்களாவன கடத்தல் முறை அதிகரிப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டம் (ரூ. 6,700 இலட்சம்), வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தினால் நிதியிடப்பட்ட கடத்தல் மற்றும் மின்கம்பி அமைப்புத் துணை நிலைய அபிவிருத்திச் செயயற்றிட்டம் (ரூ. 2,700 இலட்சம்) வலு வழங்கல் மற்றும் கடத்தல் செயற்றிட்டம் (ரூ. 1,970 இலட்சம்) பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட இரண்டாவது வலு வழங்கல் மற்றும் கடத்தல் செயற்றிட்டம் (ரூ. 1,780 இலட்சம்) என்பனவாகும். கிராமிய மின்னூட்டலுக்காக ரூ. 4,060 இலட்சங்கொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியங்கள் வழங்கப்பட்டன. சபுகஸ்கந்த (40 மெ. வா) என்ற இடத்தில் டீசல் விரிவாக்க நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூ. 2,980 இலட்சம் கொண்ட தொகையொன்று செலவிடப்பட்டதுடன் இது சமனலவெவ செயற்றிட்டத்தின் மின் வலுத்துறைக்கு ஏற்பட்ட முக்கிய அதிகரிப்பாகும். முன்னைய ஆண்டுகளைப் போலவே 1995 இலும் இலங்கை மின்சபை அதிகூடிய குறைச் செலவு விகிதமொன்றினைப் பதிவுசெய்துள்ளது. (திட்டமிடப்பட்ட மொத்த முதலீட்டில் 46 சதவீதம்) இலங்கை மின்சபை மூலங்களின் குறைச் செலவுக்கான முக்கிய காரணங்களாக கேள்விப்பத்திர வழங்கல்களின் தாமதம் ஒப்பந்தக்காரர்களின் திருப்தியற்ற செயலாற்றம் தேவையான காணிகளைப் பெறுவதில் தாமதம் என்பன விளங்கின.

ஆய்வுக்குரிய காலப்பகுதியில் தனியார் துறையினால் வலு உருவாக்கத்தினை ஊக்குவிப்பதற்கான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கட்டி, உடைமையாக்கி, தொழிற்படுத்தம் அடிப்படையில் கருத்திற் கொள்ளப்பட்ட முக்கிய செயற்றிட்டங்களாவன சபுகஸகந்த (51 மெவா), இணைந்த சுற்று வலுப்பொறி (120/150 மெவா) கப்பலிலிருந்து வலு வழங்கும் பாஜ் மவுண்டட் வலுப்பொறி (60/50 மெவா) அம்பாந்தோட்டை என்ற இடத்தில் சுத்திகரிப்புச் செயற்றிட்டத்தில் கூட்டு வலுப்பொறி (300 மெவா) திருகோணமலையில் நிலக்கரி வலுப்பொறி (300 மெவா) புரோட்லோட் மின்வலுப்பொறி (40 மெவா) என்பன விளங்கின. இதற்கு மேலதிகமான ஒன்பது சிறிய நீர் மின்வலுப் பொறிகளுக்கும் 12 மெவா காற்று வலுப் பொறியொன்றினதும் அபிவிருத்திக்கான செயல் நோக்கக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை மின்சேமிப்பையும் செயல் திறனையும் மேம்படுத்தும் நோக்கில் 1995 இல்

உதவிக் கொண்டுப்பனவினைக் கொண்ட விலையில் புளோரசன்ட் மின் குமிழ்களின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இவ்வாண்டில் கிட்டத்தட்ட 85,000 மின்குமிள்கள் விற்பனை செய்யப்பட்டன. மின்வலு சீராக்கல் பொறிகளின் தொகை வடிவிலான வழங்கலையும் நிறுவுதலையும் மேம்படுத்தும் பொருட்டு தேசிய அபிவிருத்தி வங்கி அபிவிருத்திநிதிக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் ஊடாக இலங்கை மின்சபை சலுகைக் கடன் திட்டம் ஒன்றினைத் தொடங்கியுள்ளது.

## பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள்

1995 இல் மசகெண்ணெய் இறக்குமதிகள் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததோடு பேணல் நோக்கங்களுக்காக தூய்மி மூடப்படும்போது இது பொதுவான நிகழ்வொன்றாகும். இதேவேளையில் மசகெண்ணெயின் சராசரி பன்னாட்டு விலைகள் 8 சதவீதத்தினால் 1994 இன் பீப்பாய் ஒன்றிற்கு ஐ. அ. டொலர் 16.22 இலிருந்து 1995 இல் ஐ. அ. டொலர் 17.59 இற்கு அதிகரித்தது. மேலதிகக் கேள்வியானது சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் இறக்குமதிகளின் மூலம் ஈடுசெய்யப்பட்டதுடன் இது 1994 இன் மட்டத்தினைவிட இரு மடங்கிற்கும் மேலான அதிகரிப்பாகும். கொழும்பு வாயு கம்பனியின் திரவப் பெற்றோலிய வாயு இறக்குமதிகளின் தொகை நியதிகளில் 32 சதவீதத்தினாலும் பெறுமதி நியதிகளில் 59 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இந்த நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கும் வகையில் பெற்றோலிய இறக்குமதிகளின் மீதான மொத்தச் செலவு 35 சதவீதத்தினால் அதிகரித்தது.

1995 இல் அரசின் வருவாய் நோக்கங்களுக்காக டீசல் மற்றும் பெற்றோல் என்பனவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. 1995 பெப்புருவரியில் புதிய உற்பத்தி வரிகளின் அறிமுகப்படுத்தலுடன் அனைத்து வகை டீசலினதும் விலை இலீற்றர் ஒன்று 1 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது. 1995 சனவரி 26 ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் பெற்றோல் மீதான உற்பத்தி வரி ரூ. 2 இலிருந்து ரூ. 7 இற்கு அதிகரிக்கப்பட்டமையின் மூலம் பெற்றோல் இலீற்றர் ஒன்றுக்கான விலை மேலும் 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது. தனியார் டீசல் மோட்டார் வாகனங்களுக்கான புதிய டீசல் வரியொன்றின் அறிமுகப்படுத்தலின் மூலம் டீசலின் விலை அனுகூலங்களை நீக்கியதன் ஊடாக டீசல் மீதான குறுக்கு உதவிக் கொடுப்பனவினை அதிகளவில் தேவைப்படும் வகையினருக்கு மட்டுப்படுத்துதற்கான முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. எனினும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களில் உள்நாட்டு விலைக் குறியீட்டில் உள்ளடக்கப்பட்ட குறுக்கு உதவிக் கொடுப்பனவு (அதாவது பெற்றோலின் விலையை கொள்விலைக்கு அதி உயர்வாக நிருணயித்தலும் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலையினை கொள்விலைக்கு கீழாக நிருணயித்தல்) 1995 இலும் தொடர்ந்தது.

1995 இல் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டு நுகர்வு முன்னைய ஆண்டினைவிட 10 சதவீத கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தது. அனைத்து வகை பெற்றோலிய உற்பத்திப் பொருட்களிலும் அந்த அதிகரிப்புக் காணப்பட்டது. சார்பு ரீதியில் குறைவான விலையின் காரணமாகவும் அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாகவும் தன்னியக்க டீசலின் நுகர்வு 9 சதவீத்தினால் அதிகரித்தது. அதிகரித்த விலைகளின் காரணமாக பெற்றோலுக்கான கேள்வி அதிகரிப்பு முன்னைய ஆண்டின் 6 சதவீதத்திலிருந்து 1995 இல் 3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வெப்பமின்வலு உருவாக்கத்தின் காரணமாக பாரடீசலின் பாவனை 48 சதவீதத்தால் அதிகரித்தது. 1995 இல் மசகெண்ணெய்க்கான கேள்வி முன்னைய ஆண்டினைப் போலவே 8 சதவீதத்தினால் அதிகரித்தது. பாவனையாளர்களின் வசதி மற்றும் விறகுக்கான விலை அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக சமையல் நோக்கங்களுக்கான திரவப்பெற்றோலிய வாயுவின் அதிகரித்த பயன்பாட்டினைப் பிரதிபலிக்கும் வகையில் 1995 இல் திரவப் பெற்றோலிய வாயுக்கான கேள்வி 20 சதவீதத்தினால் அதிகரித்தது.

உருகொடவத்த என்ற இடத்தில் தாங்கிகளுக்கு ஏற்பட்ட சேதமும் (120,000 மெற்றிக் தொன்கள் அல்லது களஞ்சிய வசதியில் 75 சதவீதம்) கொலன்னாவ என்ற இடத்தில் களஞ்சிய வசதிகளுக்கு ஏற்பட்ட சேதமும் (65,000 மெற்றிக் தொன் அல்லது களஞ்சிய வசதியில் 20 சதவீதம்) வழங்கலில் சிறிதளவு பற்றாக்குறையை விளைவித்தது. உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் உற்பத்திப் பொருட்களுக்குமான மொத்த இழப்பு முறையே ரூ. 9,000 இலட்சம் ரூ. 8,350 இலட்சம் ஆகும்.

1995 இல் பெற்றோலியத் துறையின் வழங்கல் பக்கத்தினை உறுதிப்படுத்தி விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பெற்றோலியத் தூய்மியில் ரூ. 800 இலட்சம் செலவில்

கொதிக்கும் பொறி ஒன்றினை நிறுவுவதற்கான ஒப்புதல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பிரதேச டிப்போக்களில் 13 களஞ்சியத் தாங்கிகளை நிருமாணிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சபுகஸ்கந்த தூய்மியின் இயலளவை விரிவாக்குவதற்கான தொடக்க வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனியார் துறைப் பங்கேற்பினைப் பொறுத்தளவில் அம்பாந்தோட்டை என்ற இடத்தில் கட்டி உடைமையாக்கி தொழிற்படுத்தல் /கட்டி உடைமையாக்கி மாற்றல் செய்தல் ஆகிய அடிப்படையில் பாரிய தூய்மி ஒன்றினையும் வலுப்பொறி ஒன்றினையும் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் கருத்திற் கொள்ளப்பட்டு வருகின்றன. இதேவேளையில் தனியார்துறைப் பங்கேற்பின் இன்னுமொரு நடவடிக்கையாக இலங்கை வாயுக் கம்பனியின் அரசாங்கத்தின் பங்கு (மொத்தப் பங்குகளின் 51 சதவீதம்) செல் ஓவஸீஸ் இன்வெஸ்ட்மண்ட் வீவி நெதர்லண்ட்ஸ் என்ற நிறுவனத்துக்கு ரூ. 1.9 பில்லியன் பெறுமதிக்கு விற்பனை செய்யப்பட்டது. மேலதிகமாக பன்னாட்டு பாதுகாப்பு தரங்களுக்கு திரவப்பெற்றோலிய வாயு களஞ்சிய வசதிகளைத் தரமுயர்த்துவதற்காக திரவப் பெற்றோலிய வாயுவின் களஞ்சியப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிபான எல்லை நிலையமொன்றினை நிறுவுவதற்கான செயற்றிட்டமொன்று கருத்திற் கொள்ளப்பட்டு வருகின்றது.

## 5.6. போக்குவரத்து

### போக்குவரத்து வலையமைப்பு

பாதை வாகனங்களின் அதிகரிப்பு உறுதியானதாகக் காணப்பட்டபோதும் நாட்டின் வீதி வலையமைப்பு பொதுவாக மாறாது காணப்பட்டது. நாட்டில் கிட்டத்தட்ட 97,377 கிலோமீற்றர் வீதி வலையமைப்பு காணப்படுவதுடன் இதில் 11,152 கிலோமீற்றர்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின்கீழ் காணப்படுகின்ற வேளையில் எஞ்சியவை மாகாண சபைகள், உள்ளூராட்சி அதிகாரசபைகள் மற்றும் சில அரசாங்க முகவராண்மைகள் என்பனவற்றின் கீழ் காணப்படுகின்றன. 1995 திசெம்பர் இறுதியில் 93 தனியார் மயமாக்கப்பட்ட பேருந்துக் கம்பனிகளின் பதிவுசெய்யப்பட்ட பெருந்துகளின் எண்ணிக்கை 8,807 ஆக விளங்கியவேளையில் இவற்றில் 4,692 பேருந்துகள் மட்டுமே தினசரி தொழிற் பாட்டிலிருந்தன. இதுதவிர 1995 இறுதியில் மேலதிகமாக கிட்டத்தட்ட 13,000 தனியார் பேருந்துகள் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்தன. கடந்த ஐந்து ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டவாறு உந்துஈருளிகளையும் உள்ளடக்கிய நாட்டின் வாகனத் தொகை ஆண்டொன்றுக்கு சராசரி 85,103 ஆக கணிசமாக அதிகரித்தது. இதேவேளையில் 1995 இல் இலங்கை புகைவண்டிப் பகுதியில் இயக்க வலுப்பொறிகள் மாற்றமின்றியிருந்தது. 1995 இல் இலங்கைப் புகைவண்டிப் பகுதி 134 இயக்க வலுப் பொறிகளையும் 1,312 பயணிகள் பெட்டிகளையும் 2,529 பொருட்கொண்டு செல்லும் வண்டிகளையும் கொண்டிருந்தது. புகைவண்டிப் பாதையின் நீளமும் 1,982 கிலோமீற்றர்களாக மாறாது காணப்பட்டன. நாட்டின் பொருட் கொண்டு செல்லலின் தனியார்துறை பாரவண்டிகள் பெரும் பாகமொன்றினைக் கையாண்டன. எனினும், இலங்கை புகைவண்டிப் பகுதி 1,480 இலட்சம் சரக்குத் தொன் கிலோமீற்றர்களுடன் 1995 இல் நாட்டில் கையாளப்பட்ட சரக்குகளில் கிட்டத்தட்ட 6 சதவீதத்திற்கு வகைகூறியது. இலங்கைத் துறைமுக அதிகாரசபை கொழும்பு, காலி, திருகோணமலை, காங்கேசன்துறை ஆகிய நான்கு துறைமுகங்களை நடாத்திச் செல்லுகின்ற வேளையில் நாட்டின் கரையோரப்பகுதியில் அமைந்துள்ள மீன்பிடித்துறைமுகங்கள் கடற்றொழில் அமைச்சினால் நடாத்திச் செல்லப்படுகின்றன.

### வீதி அபிவிருத்தி

தேசிய பெருந்தெருக்களின் (அஆ வகுப்பு வீதிகள்) பேணல் மற்றும் அபிவிருத்திக்குப் பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபை நாட்டின் வீதிவலையமைப்பின் பத்தில் ஒரு பங்கினை (11,152 கிலோமீற்றர்கள்) முகாமைப்படுத்தியது. இதற்கு மேலதிகமாக இவ்வாண்டில் 3,760 பாலங்கள் பேணப்பட்டன. தேசிய பெருந்தெருக்களை மேம்படுத்துவதற்கான தேவையினை வலியுறுத்தும் வகையில் பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்கான மொத்த முதலீடுகள் 1995 இல் 23 சதவீதத்தினால் ரூ. 36,100 இலட்சத்திற்கு அதிகரித்தன. எனினும் 1995 இல் தெருக்களின் பேணலுக்கான செலவு 8 சதவீதத்தினால் மட்டும் ரூ. 1,910 இலட்சத்திற்கு அதிகரித்தது. இவ்வாண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை நான்கு பாரிய வீதிப் புத்தாக்கம் மற்றும் தரமுயர்த்தல் செயற்றிட்டங்களை தொடர்ந்து மேற்கொண்டதுடன் வெளிநாட்டு உதவியுடன் கூடிய இதற்கான செலவு ரூ. 22,890 இலட்சமாக விளங்கியது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட இரண்டாவது வீதி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் கோமாகம இரத்தினபுரி பிரிவின் புத்தாக்கம் முற்றுப்பெற்றதோடு அவிசாவளை –

அட்டன் பிரிவு சம்பந்தப்பட்ட வேலைகளில் 85 சதவீதம் முற்றுப் பெற்றிருந்தது. 1995 இல் இச்செயற்றிட்டத்தின் கீழ் ஆறு பாலங்களின் புத்தாக்கமும் முற்றுப்பெற்றது. உலகவங்கியினால் நிதியிடப்பட்ட மூன்றாவது வீதிப் புத்தாக்கச் செயற்றிட்டத்தின் கீழ் காலி-மாத்தறை வீதி மாத்தறை - அக்மன வீதி, மாத்தறை-அக்குரஸ்ஸ வீதி என்பனவற்றை உள்ளடக்கிய 220 கிலோ மீற்றர்களின் புத்தாக்க வேலைகள் 1995 இல் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கம்பகா, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 15 பாலங்களின் மீளமைப்பு வேலைகளும் முற்றுப்பெற்றன. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட மூன்றாவது வீதிப்புத்தாக்க செயற்றிட்டத்தின் கீழ் குருநாகல் - பேராதனை, கட்டுகஸ்தோட்டை - மாத்தளை, போராதனை-கம்பளை, கண்டி-தென்னக்கும்பரை பாதைப் பிரிவுகளின் மொத்தம் 81 கிலோமீற்றர் பாதைகள் செப்பனிடப்பட்ட வேளையில் ஓஈசீஎப் இனால் நிதியிடப்பட்ட குறித்த அளவு காலப் பேணல் செயற்றிட்டத்தின் கீழ் 138 கிலோமீற்றர் வீதி மேற்பதனிடலும் 4,528 கிலோமீற்றர் மணல் பரப்பும் வேலையும் மேற்கொள்ளப்பட்டது.

மேலே கூறப்பட்ட முக்கியமான வீதி புத்தாக்கச் செயற்றிட்டங்களுடன், வஸ்கடுவ-பண்டாரகம-கெஸ்பாவ வீதி, பேலியகொடை புத்தளம் வீதியில் பேலியகொடை-கட்டுநாயக்க பிரிவு, கண்டி-அஸ்கிரிய-மகாயாப வீதி, போராதனை-கலொலுவா வீதி, மாலபே-கடுவெல வீதி ஆகியன 1995 இலும் தொடர்ந்தன. அதேவேளையில், பொரளை-மருதானை வீதியில் புத்தாக்க வேலைகள் இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்டன. தெமட்டகொட என்ற இடத்தில் பிரதான புகைவண்டிப்பாதையின் மேலாக மேற்பாதையொன்றுடன் இரட்டை மூன்றுவழித் தரங்களுடன் பேஸ்லயின் பாதையினை மாற்றியமைப்பதற்கும் பன்னாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் உதவியுடன் இலங்கை - யப்பான் நட்புறவுப்பாலத்திற்கு (கட்டம் II) இரண்டு புதிய போக்குவரத்து வழிகளை வழங்குவதற்குமான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளையில் தெற்குப் பெருந்தெரு மாற்றுப்பாதையினதும் தெகிவளைக் கால்வாயிலிருந்து பம்பலப்பிட்டடி வரையிலான கரையோர வழியினதும் நிருமாண வேலைகள் இவ்வாண்டுக் காலப்பகுதியில் தொடங்கப்பட்டன.

வீதி வலையமைப்பின் பத்திலொருபங்கை மட்டுமே உள்ளடக்கிய நடைமுறையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை தரமுயர்த்துவதற்கும் புத்தாக்கம் செய்வதற்குமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், வீதி வலையமைப்பின் பெரும்பகுதி குறிப்பாக மாகாண மற்றும் உள்ளூர் அதிகாரசபைப் பிரிவுகள், பாதைகள் சரியாகப் பேணாதன் காரணமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவேண்டிய நிலையிலிருந்தன. தற்போதுள்ள வீதி வலையமைப்பின் திருப்திகரமற்ற நிலைமையானது பொருளாதார நடவடிக்கைகளின் விரிவுக்கு முக்கியமானதொரு தடையாகவிருந்தது. வாகனப் போக்குவரத்தில் காணப்பட்ட கணிசமான அதிகரிப்பு தற்போதுள்ள வீதி வலையமைப்புக்கு மேலும் அழுத்தங்கள் கொடுத்து உற்பத்தி இழப்புக்களை ஏற்படுத்தியது. இதனால், தற்போதுள்ள ஒரு வலையமைப்பைப் புத்தாக்கம் செய்தல், ஒழுங்காகப் பேணல் ஆகியவற்றுடன் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்குமுகமாக மாற்று நெடுஞ்சாலைகளை அமைத்தல் மற்றும் மேம்பாலங்களை அமைத்தல் ஆகியன ஆகக் கூடிய முன்னுரிமையைப் பெறவேண்டியிருந்தன. தந்போதுள்ள இறைக் கட்டுப்பாடுகளின் நோக்கில், வீதி வலையமைப்பை விரிவுபடுத்துவதில் தனியார்துறையின் பங்களிப்பு இன்றியமையாததாகும். இவ்விடயத்தில், கவனத்துக்கெடுக்கப்பட்டுள்ள சில புதிய செயற்றிட்டங்கள் கட்டு, உடமையாக்கு, தொழிற்படுத்து அல்லது கட்டு, தொழிற்படுத்து மாற்றல் செய் என்ற அடிப்படையில் கட்டடவாக்கத்துக்கும், நடைமுறைப்படுத்தலுக்குமாக தனியார்துறை முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

## பயணிகள் போக்குவரத்து

பயணிகள் போக்குவரத்துத் துறையின் வர்த்தக ரீதியிலான வாய்ப்பு நிலைமையானது அமைப்பு மற்றும் நிருவாக அடிப்படையிலான பல்வேறு கடும்சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. பரந்தும் நிறைவற்றும் காணப்பட்ட உடைமையானது தனியார் பயணிபோக்குவரத்துத் துறையின் திறமையான தொழிற்பாட்டைத் தடைசெய்த வேளையில் அதிகரித்துச் செல்லும் உள்ளீட்டுச் செலவுக்கு மத்தியிலும் அதிகரிக்கப்பட்ட பயணக் கட்டணங்களும் நிருவாக ரீதியிலான திறமைக்குறைவுகளும், 1992 இலிருந்து பேருந்துக் கட்டணங்கள் சீராக்கஞ் செய்யப்படாமையும் இலாபத்தைக் குறைப்பதற்கு வழிவகுத்தன. தனியார் பயணி போக்குவரத்துத் துறையினால் வழங்கப்பட்ட பணிகளின் தரம் தொடர்ந்து திருப்தியற்றதாகக் காணப்பட்டமைக்கு ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தாமையும் பணிகளின் தரத்தை முன்னேற்றுவதற்கான முதலீடு குறைவாயிருந்தமையுமே காரணங்களாகும். இதேபோல, அரசதுறை பயணிகள் போக்குவரத்துத் துறையின் வாய்ப்பான

## அட்டவணை 5.7

### போக்குவரத்துத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1991 - 1995

| விடயம் | அலகு | 1991 | சதவீத மாற்றம் | 1992 | சதவீத மாற்றம் | 1993 | சதவீத மாற்றம் | 1994 | சதவீத மாற்றம் | 1995(அ) | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் | | | | | | | | | | | |
| தனியார் பயணி வண்டிகள்** | எண்ணிக்கை | 2,987 | 178.9 | 2,479 | -17.0 | 1,835 | -26 | 3,347 | 82.4 | 1,653 | -50.6 |
| தனியார் ஊர்திகள்*** | ,, | 15,076 | -0.4 | 20,177 | 33.8 | 1,680.2 | -16.7 | 22,517 | 34.0 | 30,046 | 33.4 |
| உந்து ஈருருளிகள் | ,, | 58,643 | -30.5 | 65,834 | 12.3 | 53,934 | -18.1 | 36,791 | -31.8 | 34,207 | -7.0 |
| சரக்குகள் கொண்டு செல்வதற்கான ஊர்திகள் | ,, | 3,200 | 15.3 | 4,146 | 29.6 | 4,948 | 19.3 | 5,213 | 5.4 | 7,293 | 39.9 |
| நில ஊர்திகள் | ,, | 4,003 | 49.8 | 5,487 | 37.1 | 6,646 | 21.1 | 7,160 | 7.7 | 9,224 | 28.8 |
| ஏனையவைகள் | ,, | 76 | 28.8 | 134 | 76.3 | 8 | -94.0 | 34 | 325.0 | 30 | -11.8 |
| தனியார் சொகுசு வண்டிகள் | ,, | 272 | 209.1 | 425 | 56.3 | 295 | -30.6 | 476 | 61.4 | 47 | -90.1 |
| 2. இலங்கைப் புகைவண்டிப் பகுதி | | | | | | | | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் | ப. இ. | 7.6 | 4.1 | 8.1 | 6.6 | 8.2 | 1.2 | 8.0 | -2.4 | 8.0 | - |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் | ,, | 2,653.4 | -4.6 | 2,613.4 | -1.5 | 2,821.6 | 8.0 | 3,201.7 | 13.5 | 3,404.0 | 6.3 |
| சரக்குத் தொன் கிலோ மீற்றர்கள் | ,, | 169.1 | 3.2 | 177.0 | 4.7 | 159.2 | -10.1 | 154.1 | -3.2 | 148.1 | -3.9 |
| மொத்த வருவாய் | ரூ. ப. இ. | 808.0 | 18.8 | 885.0 | 9.5 | 820.0 | -7.3 | 916.0 | 11.7 | 947.0 | 3.4 |
| நடைமுறைச் செலவு | .. | 1,199.0 | 13.4 | 1,239.0 | 3.3 | 1,236.0 | -0.2 | 1,675.0 | 35.5 | 1,735.0 | 3.6 |
| தொழிற்பாட்டு இழப்பு | .. | 391.0 | 18.0 | 354.0 | -9.5 | 416.0 | 17.5 | 758.0 | 82.2 | 788.0 | 4.0 |
| மூலதனச் செலவு | .. | 2,595.0 | 105.1 | 1,998.0 | -23.0 | 3,185.0 | 59.4 | 2,584.0 | -18.9 | 3,117.0 | 20.6 |
| இடைவெளியை நிதியிடல் | .. | 2,986.0 | 80.3 | 2,352.0 | -21.2 | 3,601.0 | 55.1 | 3,342.0 | -7.2 | 3,905.0 | 16.8 |
| 3. மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகள் | | | | | | | | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் | ப. இ. | 247.0 | 0.7 | 268.1 | 8.5 | 272.2 | 1.5 | 306.7 | 12.6 | 351.1 | 14.5 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் | ,, | 11,454.0 | -14.1 | 12,840.0 | 12.1 | 13,608.0 | 6.0 | 15,613.1 | 14.7 | 19,361.0 | 24.0 |
| மொத்த வருவாய் | ரூ. ப. இ. | 2,761.0 | 5.5 | 2,737.0 | -0.9 | 3,043.7 | 11.2 | 3,593.5 | 18.1 | 4,339.5 | 20.8 |

* தற்காலிகமானவை

** மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட பேருந்துகளையும் உள்ளடக்கும்.

*** இரட்டை நோக்கத்திற்கான ஊர்திகளையும் உள்ளடக்கும்

மூலங்கள் : உந்து ஊர்திகள் திணைக்களம்,
இலங்கை புகைவண்டிப் பகுதி,
இலங்கைப் போக்குவரத்துச் சபை,
தேசிய போக்குவரத்து ஆணைக் குழு.

தன்மையும் தொடர்ச்சியான நிதி இழப்புக்களினால் பாதிக்கப்பட்டது. பாதுகாப்பானதும், திறனுடையதும், நம்பத்தகுந்ததுமான பணியை வழங்குவதற்காக இத்துறையின் வர்த்தக ரீதியிலான வாய்ப்பான தன்மையானது பேருந்துக் கட்டணங்களில் பொருத்தமான திருத்தங்கள் மேற்கொள்ளப் படுவதனூடாக ஏனைய வழிகளால் மீளவழங்கப்படல் வேண்டும்.

போக்குவரத்துக் கட்டணங்கள் தொடர்பான விடயங்களைப் பரிசீலிப்பதற்காக 1995 மாச்சில் குழுவொன்று (அரச போக்குவரத்துக் கட்டணக்குழு) அமைக்கப்பட்டது. இக்குழு தொழிற்பாட்டுச் செலவு, சமாளிக்கக்கூடிய தன்மை, பொருத்தமான கழிவுகள், தர வேறுபாடுகள், தற்போதுள்ள பொருளாதார நிலைமைகள் போன்றவற்றில் உரிய கவனம் செலுத்தி பொருத்தமான கட்டணஅமைப்பு ஒன்றை உருவாக்கியது. இக்குழு, பேருந்துப் போக்குவரத் துத் துறைக்கு 21 - 40 சதவீத வீச்சுக்குள்ளேயும், புகையிரதத்துக்கு 46 சதவீதமாகவுள்ள கட்டண அதிகரிப்புக்களையும் விதந்துரைத்தது. இக்குழுவின் விதந்துரைப்புக்கள் இவ்வாண்டில் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

அதேவேளையில், மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கில், கம்பனிகளை மீள அமைக்கவும், நிருவாகத்தைத் தரமுயர்த்தவுமென குழுவொன்று அமைக்கப்பட்டது. இவ்வுத்தேச மீளமைப்பானது தற்போதுள்ள 93 கம்பனிகளையும் 11 பிரதேசக் கம்பனிகளாக சேர்த்து மாற்றுவதை இன்றியமையாததாகக் கருதியது.

### பேருந்துப் போக்குவரத்து

1995 இறுதியில் 93 மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்துக் கம்பனிகள் காணப்பட்டன. ஊர்தித் தொகுதியிலேற்பட்ட விரிவினால் இலகுவாக்கப் பட்டமையினால் இக்கம்பனிகளின் தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் 14 சதவீதத்தால் அதிகரித்தன. மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளினால் நாளொன்றுக்கு தொழிற்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை, 1994 இன் 4,207 பேருந்துகளுடன் ஒப்பிடுகையில் 1995 இல் 4,692 பேருந்துகளாகக் காணப்பட்டன. போக்குவரத்துப் பணிகளுக்கான தேவை அதிகரித்துச் செல்வதைப் பிரதிபலிக்கும் வகையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து 24 சதவீதத்தினால் அதிகரித்தது. மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளின் மொத்த வருவாய் முன்னைய ஆண்டைவிட 21 சதவீதத்தால் அதிகரித்தது. இது, உதவுதொகை வழங்கப்பட்ட பருவகாலப் பயணச்சீட்டுக்களுக்காகவும், இலாபமற்ற பாதைகளுக்கான தொழிற்பாடுகளுக்காகவும் அரசிட மிருந்து பெறப்பட்ட ரூ. 3,500 இலட்சங்கொண்ட தொகையொன்றையும் உள்ளடக்கியதாகும். 1995 இல் தேசிய போக்குவரத்து வலையமைப்பை வலுப்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அளவுக்கு மேல் ஆட்களை ஏற்றல் கூடிய வேகத்தில் செல்லல், பேருந்துக்காகக் காத்திருக்கும் நேர அதிகரிப்பு போன்ற நடைமுறைப் பிரச்சினைகளைக் குறைக்கும் நோக்கில், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவானது (தேபோஆ) தனியார்துறை தொழிற்பாட்டாளர்களுக்கும், மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளுக்குமான இணைந்த, திட்டமிடப்பட்ட பேருந்துத் தொழிற்பாடுகளை ஒழுங்கு செய்தது. இதன்படி, ஊவா, வடமத்திய, மற்றும் தென் மாகாணங்களின் பேருந்துப் பாதைகள் இவ்வாண்டில் இணைந்துசெயற்பட்டன. தேசிய போக்குவரத்துக்குழு, தற்போதுள்ள தாழ்ந்த கூரையுடனான பேருந்துகளை காலப்போக்கில் அகற்றி பேருந்துகளுக்கான புதிய வடிவங்களுக்குரிய புதிய அளவிடைகளை வழிமுறைப்படுத்துவதற்கான நடைமுறைகளை எடுத்தது.

பேருந்துப் பயணி போக்குவரத்துப் பணிகளை வழங்குவதில் தனியார்துறை பங்களிப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்டோர் தொகை 1995 காலப்பகுதியில் குறைவாகக் காணப்பட்டது. உந்து, ஊர்தித் திணைக்களத்தில் தனியர் பேருந்துகளின் (மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளினதையும் உள்ளடக்கி) புதிய பதிவு 1994 இலிருந்த 3,347 உடன் ஒப்பிடுகையில் 1995 இல் 1,653 ஆக விளங்கியது. இது தற்போதைய நிலைமைகளின்கீழ் தனியார் பயணி போக்குவரத்து முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சி குறைந்ததாகக் காணப்படுவதையே பிரதிபலிக்கின்றது. புதிய கட்டணங்கள் அமுல்படுத்தப்பட்டிருப்பின் இத்துறையில் அதிகமான முதலீடுகள் இடம்பெற்றிருக்கும்.

### புகைவண்டிப் போக்குவரத்து

ஆய்வின் கீழான ஆண்டில் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் செயலாற்றம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதையும் காட்டவில்லை. இலங்கை புகைவண்டிப் பகுதியின் தொழிற்பட்டகிலோமீட்டர்கள் 80 இலட்சம் கிலோமீட்டர்களாக மாற்றமின்றியிருந்தது. புகைவண்டிப்பயணி கிலோமீட்டர்கள் முன்னைய ஆண்டின் 14 சதவீத அதிகரிப்புடனொப்பிடின் 1995 இல் 6 சதவீதத்தினால் அதிகரித்தன. பொருட்களைக் கொண்டு செல்லல், முன்னைய

இரு ஆண்டுகளிலும் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடையும் போக்கினைத் தொடர்ந்து 4 சதவீதத்தினால் வீழ்சிடையந்தது.

இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் செயலாற்றம், வீழ்ச்சியடைந்து சென்றமைக்கு, கடந்த காலங்களில் புகைவண்டிப் பகுதியின் உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் பேணலுக்குமான மூதலீடு குறைவடைந்தமையே பெருமளவு காரணமாகும். தற்போதுள்ள புகைவண்டிப் பாதையின் திருப்திகரமற்ற நிலைமைகளும், தொடர்வண்டிகள் குறைந்தளவில் கிடைத்தமையும் தற்போதுள்ள தொடர் வண்டிகளின் பழைய தன்மையும், நடைமுறையில் இல்லாத தொடர்பூட்டல் மற்றும் சைகை முறைகளும் தொழிற்பாட்டு அளவைக் கடுமையாகப் பாதித்ததுடன், பணியின் தரத்தையும் குறைத்தன. கூடிய ஆதாயம் கொடுக்கும் வடக்குப்பாதை, அப்பகுதியில் காணப்பட்ட நிலையற்ற பாதுகாப்பு நிலைமை காரணமாக 1995 இல் தொடர்ந்தும் எட்டாவது ஆண்டாக தொழிற்படாமலிருந்தது. இவ்வாண்டில் வடக்குப் பாதையிலும் தலைமன்னார் தாண்டிக்குளத்துக்கு அப்பால் எதுவித பணிகளும் தொழிற்படுத்தப்படாதவேளையில் திருகோணமலை-மட்டக்களப்பு புகைவண்டிப் பணிகளிலும் இடையீடுகள் காணப்பட்டன. பணிகளில் மேலும் வீழ்ச்சியேற்படுவதைத் தடுக்கும் வகையில் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தினால் (வெபொஒநி) நிதியிடப்பட்ட புகைவண்டிப்பாதை, தொடர்வண்டிகள் மற்றும் வேலைத்தலங்களை உள்ளடக்கிய முக்கியமானதொரு புத்தாக்கத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. புகைவண்டிப் பெட்டிகளில் கடுமையான மேலதிக சன நெருக்கடியைக் குறைக்கும்பொருட்டு டீசல் பெருக்க அலகுகளுடன் அதிக பயணிகளை உள்ளடக்குவதற்காக ரோமானிய பெட்டிகள் மாற்றியமைக்கப்பட்டன. பாலங்கள் புத்தாக்கத் திட்டத்தின்கீழ் களுத்துறை மற்றும் பாணந்துறை புகைவண்டிப் பாலங்களைப் புத்தாக்கம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வட்டவளை அமிழ்வினைத் தடுப்பதற்கான நிரந்தர வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டமையினால் வழமையான பணிகளுக் கான இடையூறுகள் நீக்கப்பட்டன. அத்துடன், 173,257 கொங்கிரீட் கிடைக் கட்டைகளை இட்டதன் மூலம் புகைவண்டிப் பாதைகள் முன்னேற்றம் செய்யப்பட்டு பல வேகக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. களனிப் பள்ளத்தாக்குப் பாதை மீதான பணிகளை முன்னேற்றும் நோக்கமாக, பாதுக்கவிலிருந்து அவிசாவளை வரையிலான பாதைகளை பரந்த அளவில் மதிப்பீடு செய்யும் செயற்றிட்டம் இவ்வாண்டில் செயற்பட்டுக்கொண்டிருந்தது.

இலங்கைப் புகையிரதப் பகுதியின் நிதி நிலைமை மிகக் கூடிய தொழிற்பாட்டு இழப்புக்கள் காரணமாக 1995 இல் மேலும் வீழ்ச்சியடைந்தது. போக்குவரத்துக் கட்டணங்கள் மாற்றப்படாமலும், தொழிற்பாட்டு அளவு குறைப்பட்டும் இருந்தமையினால் இலங்கை புகையிரதப் பகுதியின் வருவாய் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூ. 9,470 இலட்சமாகக் காணப்பட்ட வேளையில் நடைமுறைச் செலவு 1995 இல் 4 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 17,350 இலட்சமாகக் காணப்பட்டது. இதற்கு திருத்த வேலைகளுக்கும் பேணலுக்குமான அதிகரித்த செலவே பெருமளவு காரணமாகும். இதன் விளைவாக இலங்கை புகையிரதப் பகுதியின் தொழிற்பாட்டு இழப்பு 1994 இன் ரூ. 7,580 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 7,880 இலட்சத்துக்கு அதிகரித்தது.

இலங்கைப் புகைவண்டிப் பகுதியினை வர்த்தக முயற்சியொன்றாக மாற்றுவதே தற்போதைய கொள்கை உத்தியின் நோக்கமாகும். இலங்கைப் புகையிரதப் பகுதியின் செயல் திறனை முன்னேற்றும் வகையில், வர்த்தக ரீதியிலான முகாமைத்துவ அணுகுமுறை, சந்தைப்படுத்தல், தொழிற்பாடுகள், தீர்வைகள் மற்றும் மனித மூலவளங்கள் தொடர்பிலான நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் போன்றவை உலக வங்கியின் ஆராய்வில் எடுத்துரைக்கப் பட்டன. கட்டு தொழிற்படுத்து மாற்றல் செய்/கட்டு சொந்தமாக்கு தொழிற்படுத்து என்ற அடிப்படையில் புறநகர்ப் புகைவண்டிப் பகுதிக்கான மின்னூட்டல் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

## துறைமுகப் பணிகள்

இலங்கை துறைமுக மேலாண்மைச்சபை (இதுமேச) ஏற்றுமதி அடிப்படையிலான வளர்ச்சிக்கு இன்றியமையாத துறைமுக வலையமைப்பு வேலையை அபிவிருத்தி செய்வதற்குப் பொறுப்பாயுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள முக்கிய துறைமுகமாக கொழும்புத் துறைமுகத்தை நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்யும் நோக்கில் பல செயற்றிட்டங்கள் இலங்கை துறைமுக மேலாண்மைச் சபையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. கொள்கலன்களின் ஆண்டுக்கான கொண்டு செல்லும் சுமையின் அளவை

## அட்டவணை 5.8

## துறைமுகப் பணிகளின் செயலாற்றம் 1991 – 1995

| வகை | 1991 | 1992 | 1993 | 1994 | 1995(அ) | சதவீத மாற்றம் 1994 | சதவீத மாற்றம் 1995 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. முதலிடப்பட்ட மூலதனம் (ரூ.ப.இ.) | 13,409 | 14,411 | 17,352 | 20,806 | 25,231 | 20 | 21 |
| 2. வருகை தந்த கலம்களின் உண்ணிக்கை | 3,415 | 3,961 | 4,345 | 4,294 | 4,169 | -1 | -3 |
| கொழும்பு | 3,076 | 3,624 | 3,887 | 3,790 | 3,611 | -2 | -5 |
| காலி | 142 | 74 | 210 | 223 | 253 | 6 | 13 |
| திருகோணமலை | 197 | 263 | 248 | 281 | 305 | 13 | 9 |
| 3. கையாளப்பட்ட மொத்தச்சரக்கு (மெ.தொ. 000) | 13,691 | 13,331 | 16,498 | 18,097 | 19,517 | 10 | 8 |
| கொழும்பு | 12,283 | 11,957 | 14,712 | 16,143 | 17,414 | 10 | 8 |
| காலி | 219 | 236 | 255 | 303 | 237 | 19 | -22 |
| திருகோணமலை | 1,189 | 1,139 | 1,531 | 1,651 | 1,866 | 8 | 13 |
| 4. மொத்த கொள்கலன் போக்குவரத்து | 669 | 676 | 858 | 973 | 1,049 | 13 | 8 |
| கொழும்பு | 669 | 676 | 858 | 973 | 1,049 | 13 | 8 |
| காலி | - | - | - | - | - | - | - |
| திருகோணமலை | - | - | - | - | - | - | - |
| 5. மாற்றி ஏற்றல் கொள்கலன் | 470 | 451 | 591 | 666 | 700 | 13 | 5 |
| கொழும்பு | 470 | 451 | 591 | 666 | 700 | 13 | 5 |
| காலி | - | - | - | - | - | - | - |
| திருகோணமலை | - | - | - | - | - | - | - |
| 6. அரசிறை (ரூ.ப.இ.) | 3,752 | 4,031 | 4,931 | 5,197 | 6,820 | 5 | 31 |
| கொழும்பு | 3,609 | 3,872 | 4,737 | 4,964 | 6,581 | 5 | 33 |
| காலி | 51 | 50 | 64 | 90 | 72 | 41 | -20 |
| திருகோணமலை | 92 | 109 | 130 | 143 | 163 | 10 | 14 |
| 7. செலவு (ரூ.ப.இ.) | 2,715 | 3,093 | 3,982 | 4,670 | 5,460 | 17 | 17 |
| கொழும்பு | 2,529 | 2,888 | 3,717 | 4,394 | 5,129 | 18 | 17 |
| காலி | 67 | 73 | 93 | 107 | 127 | 15 | 19 |
| திருகோணமலை | 118 | 131 | 171 | 169 | 203 | -1 | 20 |
| 8. வரிக்கு முன்னான தேறிய இலாபம் (ரூ.ப.இ.) | 1,037 | 938 | 949 | 527 | 1,360 | -44 | 158 |
| கொழும்பு | 1,078 | 984 | 1,020 | 569 | 1,452 | -44 | 155 |
| காலி | -17 | -23 | -30 | -17 | -52 | -43 | 206 |
| திருகோணமலை | -26 | -22 | -41 | -25 | -40 | -39 | 60 |
| 9. தொழில்நிலை (எண்ணிக்கை) | 18,312 | 17,843 | 17,345 | 16,910 | 16,492 | -3 | -2 |
| கொழும்பு | 16,486 | 16,181 | 15,844 | 15,409 | 14,851 | -3 | -4 |
| காலி | 701 | 656 | 634 | 634 | 779 | 0 | 23 |
| திருகோணமலை | 1,125 | 1,056 | 867 | 867 | 862 | 0 | -1 |

அ. தற்காலிகமானது

மூலம் : இலங்கை துறைமுக மேலாண்மைச் சபை.

35,000 பத்துசமமான அலகுகளுக்கு அதிகரிப்பதற்காக பரமக்ஸ் கப்பல்களை கையாளுவதற்கு இயலச் செய்யும் வகையில் ஜாயா கொள்கல எல்லைக் கோடியை அபிவிருத்தி செய்வதன் மூன்றாவது கட்டம் 1995 பெப்புருவரியில் தொடக்கப்பட்டது. துறைமுகத்துக்கான பிரதான நுழைகால்வாயினை 15 மீற்றர்களால் தோண்டி பாரிய கப்பல்கள் துறைமுகத்துள் நுழைவதை இயலச் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன. அத்துடன் காலித்துறைமுகத்தை கட்டு, சொந்தமாக்கு தொழிற்படுத்து/கட்டு தொழிற்படுத்து மாற்றல் செய் என்ற அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய மூன்று துறைமுகங்களிலும் கையாளப்பட்ட மொத்த சரக்கு 195 இலட்சம் மெற்றிக்தொன்களாக விளங்கி, முன்னைய ஆண்டில் ஏற்பட்ட 10 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடின் 8 சதவீதத்தால் அதிகரிப்பைப் பதிவுசெய்தது. மொத்தச் சரக்கில் ஏறக்குறைய 90 சதவீதமானவை அல்லது 174 இலட்சம் மெற்றிக் தொன் கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்டன. இலங்கைத் துறைமுகத்தை வந்தடைந்த கப்பல்களின் மொத்த எண்ணிக்கை 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 4,172 ஆக விளங்கியது. கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட கொள்கலன் சுமை, 1995 இல் 10 இலட்சம் பத்து சமமான அலகுகளாக விளங்கி முன்னைய ஆண்டுகளைவிட 8 சதவீதங்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தது. கப்பலிலிருந்து மாற்றி ஏற்றுதல் மொத்த கொள்கலன் சுமையின் 67 சதவீதத்துக்கு வகைகூறியது. கொழும்பு துறைமுகத்தின் மொத்த சரக்குச் சுமையில் 67 சதவீதமானவை கொள்கலன்களில் இடப்பட்டவை.

## அட்டவணை 5.9

### மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் புதிதாகப் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு

(எக்டேயர்கள்)

| விடயம் | பெரும் போகம் 1992/93 | சிறு போகம் 1993 | மொத்தம் 1993 | பெரும் போகம் 1993/94 | சிறு போகம் 1994 | மொத்தம் 1994 | பெரும் போகம் 1994/95 (அ) | சிறு போகம் 1995 (அ) | மொத்தம் 1995 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முறை 'எச்' | 33,390 | 11,660 | 45,050 | 33,481 | 22,996 | 56,477 | 33,025 | 18,841 | 51,866 |
| நெல் | 29,117 | 2,291 | 31,408 | 29,950 | 11,205 | 41,155 | 31,228 | 11,330 | 42,558 |
| ஏனைய பயிர்கள் | 4,273 | 9,369 | 13,642 | 3,531 | 11,791 | 15,322 | 1,797 | 7,511 | 9,308 |
| முறை 'பி' | 13,591 | 12,594 | 26,185 | 20,174 | 17,908 | 38,082 | 16,083 | 12,371 | 28,454 |
| நெல் | 12,513 | 11,956 | 24,469 | 18,321 | 16,007 | 34,328 | 13,792 | 11,537 | 25,329 |
| ஏனைய பயிர்கள் | 1,078 | 638 | 1,716 | 1,853 | 1,901 | 3,754 | 2,291 | 834 | 3,125 |
| முறை 'சி' | 21,521 | 19,976 | 41,497 | 23,868 | 20,148 | 44,016 | 24,926 | 20,561 | 45,487 |
| நெல் | 19,289 | 19,089 | 38,378 | 20,256 | 19,427 | 39,683 | 20,812 | 19,485 | 40,297 |
| ஏனைய பயிர்கள் | 2,232 | 887 | 3,119 | 3,612 | 721 | 4,333 | 4,114 | 1,076 | 5,190 |
| முறை 'ஜி' | 5,414 | 3,732 | 9,146 | – | – | – | 5,553 | 4,961 | 10,514 |
| நெல் | 5,096 | 2,269 | 7,365 | – | – | – | 5,177 | 3,852 | 9,029 |
| ஏனைய பயிர்கள் | 318 | 1,463 | 1,781 | – | – | – | 376 | 1,109 | 1,485 |
| முறை 'எல்' | 1,095 | 82 | 1,177 | 1,135 | 148 | 1,283 | 961 | 146 | 1,107 |
| நெல் | 684 | 42 | 726 | 705 | 139 | 844 | 704 | 112 | 816 |
| ஏனைய பயிர்கள் | 411 | 40 | 451 | 430 | 9 | 439 | 257 | 34 | 291 |
| மொத்தம் | 75,011 | 48,044 | 123,055 | 78,658 | 61,200 | 139,858 | 80,548 | 56,880 | 137,428 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை

அட்டவணை 5,10

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடியேற்றம்
('எச்,' 'சி,' 'பீ' 'ஜி,' 'எல்' முறைகள்)

குடும்பங்களின் எண்ணிக்கை

| ஆண்டு | முறை | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | 'எச்' | 'சி' | 'பீ' | 'ஜி' | 'எல்' | |
| 1976 ... ... | 2,383 | – | – | – | – | 2,383 |
| 1977 ... ... | 3,141 | – | – | – | – | 3,141 |
| 1978 ... ... | 2,754 | – | – | – | – | 2,754 |
| 1979 ... ... | 5,290 | – | – | – | – | 5,290 |
| 1980 ... ... | 7,407 | – | – | – | – | 7,407 |
| 1981 ... ... | 2,389 | 2,777 | – | – | – | 5,166 |
| 1982 ... ... | 1,449 | 2,683 | 1,918 | – | – | 6,050 |
| 1983 ... ... | 1,077 | 1,988 | 1,938 | 1,319 | – | 6,322 |
| 1984 ... ... | 1,956 | 1,992 | 1,381 | 446 | – | 5,775 |
| 1985 ... ... | 44 | 823 | 3,423 | 1,045 | – | 5,335 |
| 1986 ... ... | 780 | 2,151 | 1,260 | 583 | – | 4,774 |
| 1987 ... ... | 182 | 1,407 | 857 | 274 | – | 2,720 |
| 1988 ... ... | 14 | 1,081 | 656 | 85 | 3,270 | 5,106 |
| 1989 ... ... | 9 | 1,008 | 324 | 1,305 | 94 | 2,740 |
| 1990 ... ... | 1,680 | 3,427 | 3,492 | 366 | – | 8,965 |
| 1991 ... ... | 1,151 | 3,240 | 1,468 | 126 | – | 5,985 |
| 1992 ... ... | 754 | 2,005 | 1,716 | 6 | – | 4,481 |
| 1993 ... ... | 283 | 1,500 | 3,190 | – | – | 4,973 |
| 1994 ... ... | 30 | 332 | 841 | – | – | 1,203 |
| 1995 (அ) ... ... | – | 68 | 132 | – | – | 200 |
| மொத்தம் | 32,773 | 26,482 | 22,596 | 5,555 | 3,364 | 90,770 |

(அ) தற்காலிகமானவை.

மூலம் : இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை

துறைமுகப் பணிகளின் மொத்தச் செலவு ரூ. 54,600 இலட்சமாக விளங்கி, 1994 ஐவிட 17 சதவீதங்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தது. மொத்தச் செலவில் 94 சதவீதமானவை (ரூ. 51,290 இலட்சம்) கொழும்புத் துறைமுகத்தின் தொழிற்பாடுகளுக்காகும். அதேவேளையில் மொத்த வருவாய் ரூ. 68,200 இலட்சமாக விளங்கி (இதில் கொழும்புத் துறைமுகத்திலிருந்து ரூ. 65,810 இலட்சம்) முன்னைய ஆண்டின் வருவாயைவிட 31 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இதன்விளைவாக மொத்த தேறிய இலாபம் 1995 இல் 58 சதவீதத்தால் அதிகரித்து 13,600 இலட்சமாக விளங்கியது. காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் தொழிற்பாட்டு இழப்புக்களைப் பதிவுசெய்தன.

## 5.7. நீர்ப்பாசன, குடியேற்றத் திட்டங்கள்

நாட்டில் முன்னெப்போதும் மேற்கொள்ளப் படாத மிகப்பெரும் நீர்ப்பாசன மற்றும் குடியேற்றத் திட்டமாகிய மகாவலித் திட்டம் 1995 இலும் தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. இலங்கை மாகவலி மேலாண்மைச் சபையின்படி, இவ்வாண்டில் ஏற்பட்டமொத்தச் செலவு ரூ. 18,020 இலட்சமாக விளங்கியது. மகாவலியின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தில் 1994 /95 பயிர்ச் செய்கை ஆண்டில் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 137,428 எக்டேயர்களாயிருந்தது. இதில் நெல்லின் கீழான நிலப்பரப்பு 118,029 எக்டேயர்களாக விளங்கிய வேளையில் எஞ்சிய 19,399 எக்டேயர்கள் ஏனைய களப்பயிர்ச் செய்கைக்குட்பட்டிருந்தன.

அட்டவணை 5.11

தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான செலவு

| செயற்றிட்டம் | உதவியின் மூலங்கள் | மொத்த வெளிநாட்டு உதவியின் கடப்பாடு (ப.இ.) | 1994 இன் உண்மையான செலவு (ரூ.ப.இ.) | 1995* இன் செலவு (ரூ.ப.இ.) | 1995* இறுதி வரை ஒன்றுசேர்ந்த செலவு (ரூ.ப.இ.) |
|---|---|---|---|---|---|
| 1. கிருண்டி ஓயா நீர்ப்பாசன, குடியமர்த்தல் செயற்றிட்டம் (கி.ஓ.நீ.கு.செ.) கட்டம் II | ஆ.அ.வ. | சிஎஉ 22.0 | 60.0 | – | 691.0 |
| 2. மினிப்பே-நாகதீப நீர்ப்பாசன புனர்வாழ்வு செயற்றிட்டம் | யப்பான் | யென் 1,850.0 | 190.0 | 98.6 | 514.6 |
| 3. வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசன செயற்றிட்டம் | ஐ.ச.ஆ. | ஈசீயூ 6.3 | 22.8 | 45.3 | 168.1 |
| 4. தேசிய நீர்ப்பாசன புனர்வாழ்வு செயற்றிட்டம் (தே.நீ.பு.செ.) | ப.அ.அ<br>ஐ.ச.ஆ. | ரூபா. 1,406.9<br>ரூபா. 1,622.6 | 157.4 | 265.0 | 613.0 |

* தற்காலிகம். மூலம் : நீர்ப்பாசனத் திணைக்களம்

எல்லா மூன்று முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான வேலை மினிபே–நாகதீப நீர்ப்பாசன புத்தாக்கச் செயற்றிட்டம் (மிநாதீபுசே), வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசனச் செயற்றிட்டம் (வமாமாசிநீசெ), தேசிய நீர்ப்பாசன புத்தாக்க செயறிட்டம் (தேநீபுசெ) ஆகிய ஏனைய மூன்று முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான வேலை தொடரப்பட்டதுடன், கடைசி இரு செயற்றிட்டங்களிலும் வேலைகள் முடிவு பெற்றுக் கொண்டிருந்தன. நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிகத் தரவுகளின்படி, மேலே கூறப்பட்ட செயற்றிட்டங்கள் மீதான மொத்தச் செலவு ரூ. 3,790 இலட்சமாயிருந்தது. கிரிண்டி ஓயா நீர்ப்பாசன மற்றும் குடியேற்றச் செயற்றிட்டம் (கிஓநீகுசெ) கட்டம் II இவ்வாண்டில் கையேற்கப்படாததுடன் இச்செயற்றிட்டத்துக்கு இவ்வாண்டில் எந்தவித செலவும் ஏற்படவில்லை. வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் 814 எக்டேயர் நிலப்பரப்பு, நன்மைபெற்றதுடன் 948 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்ட வேளையில், நீலபெம்மா செயற்றிட்டம் துட்டனோரிய குளம் கல்கும்புர அணைக்கட்டு போன்ற 9 துணைச் செற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன. தேசிய நீர்ப்பாசன புத்தாக்கச் செயற்றிட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட 3,800 எக்டேயர்கள் நிலப்பரப்பு நன்மையடைந்தது.

நீர்ப்பாசன குடியேற்றத்திட்டங்களின் கீழ் இவ்வாண்டுகளில் கமக்கார மற்றும் கமக்காரரற்ற குடும்பங்களைக் குடியமர்த்தல் முக்கியமாக மகாவலி திட்டப் பகுதிகளுக்கும், உடவளவையின் இடதுகரை வலதுகரைப் பகுதிகளுக்கும் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் உடவளவைப் பகுதியில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 2,812 ஆக விளங்கி அதில் 277 மட்டுமே கமக்காரர்குடும்பங்களாகக் காணப்பட்ட வேளையில் எஞ்சியவை கமக்காரரற்ற குடும்பங்களாகக் காணப்பட்டன. இவ்வாண்டில் மாகவலிப் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை "பீ" முறையில் 132 குடும்பங்களாகவும் "சி" முறையில் 68 குடும்பங்களாகவும் விளங்கி மகாவலி திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் ஒன்றுசேர்ந்த எண்ணிக்கையை 90,770 குடும்பங்களாக ஆக்கியது. 1993 இன் 4,973 குடும்பங்களிலிருந்து 1994 இல் 1,203 குடும்பங்களாக வீழ்ச்சியடைந்த மகாவலி திட்டத்தின் கீழான குடியேற்றங்கள் 1995 இல் மேலும் 200 குடும்பங்களாக வீழ்ச்சியடைந்தது.

## 5.8. சிறப்பு செயற்றிட்டங்கள்

### வீடமைப்பு

நாட்டின் வீடமைப்பு அபிவிருத்தியை நோக்கிய அரசின் கொள்கை, அடிப்படையாக இரு வழிமுறைகளில் வடிவமைக்கப்பட்டது. முதலாவதாக குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு புதிய வீடுகளைக் கட்டுவதற்கோ அல்லது "உறுதிப்படுத்தும்

அணுகுமுறை" இன் அடிப்படையில் அவர்களது சொந்த வீடுகளை தரமுயர்த்துவதற்கோ உதவியை நீடித்தல், இரண்டாவதாக நிதியியல் நிறுவனங்கள் வீடமைப்பு அபிவிருத்திக்காக ஆற்றல்மிக்க கடன்வழங்கும் நிறுவனங்களாக தொழிற்படுவதை இயலச்செய்யும்பொருட்டு வீடமைப்பு நிதியிடும் முறையை பலப்படுத்தல் என்பதாகும்.

அரசதுறை வீடமைப்பு அபிவிருத்திக்கு முதன்மை நிறுவனமாக விளங்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (தேவீஅஅ) 1995 இல் ஆரம்பித்த புதிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் ஆதிக்கத்தை எடுத்ததுடன் 15 இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பூர்த்தி வேலைகளைத் தொடர்ந்து செய்தது. இவ்வாண்டில், பின்னைய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய முதலீடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் தேவீஅஅ இன் கீழான முன்பு ஆரம்பிக்கப்பட்ட பல நிகழ்ச்சித் திட்டங்கள் 1995 இலும்தொடர்ந்தன. இவ்வாண்டில் தொழிற்பட்ட நிகழ்ச்சித் திடடங்களாக தேர்தல் தொகுதி ஒன்றிற்கு 100 வீடுகள் அமைக்கும் நிகழ்ச்சித் திட்டம், கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் (கிவீநிதி), நகர வீடமைப்புச் செயற்றிட்டம் (நவீசெதி), பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் (பெவீநிதி), இடர் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் (இவீநிதி) என்பன விளங்கின.

மீளாய்விற்குரிய ஆண்டில், விசேடமாக கிவீநி, இவீநி, நவீசெ என்பவற்றைப் பொறுத்தளவில் அரசதுறை வீடமைப்பு அபிவிருத்தித் தொழிற்பாடுகள் ஒரு குறைவினைக் காட்டியது. கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் (கிவீநிதி) செயலாற்றம், அடையப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை நியதியில் 50 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. அதேபோக்கைத் தொடர்ந்து, பூர்த்தி செய்யப்பட்ட வீடமைப்பு அலகுகளின் எண்ணிக்கையும் 11,493 அலகுகளுக்கு 50 சதவீதத்திற்கும் மேலாக வீழ்ச்சியடைந்தது. அது 15 இலட்சம் வீடமைப்புச் செயற்றிட்டத்தின் கீழ் தொடர்ந்த பூர்த்திகளையும் உள்ளடக்குகின்றது. இதுபோலவே, கிவீநி இன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களினதும் கொடைகளினதும் பெறுமதியும் 1994 இன் ரூ. 2,300 இலட்சத்திலிருந்து 1995 இன் ரூ. 940 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்து இதே போக்கைப் பிரதிபலித்து. நகர வீடமைப்பு செயற்றிட்டத்தின் (நவீசெ) தொழிற்பாடுகளும் 1995 இல் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. நவீநி இன்கீழான குடும்பங்களின் எண்ணிக்கை 62 சதவீதத்தால் 1,676 இற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் 15 இலட்சம் வீடமைப்புச் செயற்றிட்டங்களின்

### அட்டவணை 5.12
### புதிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் 1995

| துணை நிகழ்ச்சித்திட்டம் | அடையப் பட்ட குடும்பங்கள் | முற்றுப் பெற்ற அலகுகள் | பகிர்ந்தளிக் கப்பட்ட கடன் ரூ.ப.இ. |
|---|---|---|---|
| தேர்தல் தொகுதிக்கு 100 வீடுகள் | 10,932 | 1,574 | 104.8 |
| கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 11,941 | 3,897 | 60.3 |
| நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 1,676 | 538 | 10.6 |
| பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 1,410 | 48 | 7.4 |
| இடர் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 1,047 | 5,155 | 48.7 |
| நேரடி கட்டடவாக்க நிகழ்ச்சித்திட்டம் | 323 | 323 | 154.4 |
| மொத்தம் | 27,329 | 11,535 | 386.2 |

மூலம் : தேசியவீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை

கீழான அலகுகளை உள்ளடக்கிய பூர்த்தி செய்யப்பட்ட வீடமைப்பு அலகுகளின் எண்ணிக்கை 1994 இன் 4,480 இலிருந்து 1,723 இற்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவால், நவீநி இன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதியும் 1994 இன் ரூ. 770 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 160 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமுல்படுத்தப்பட்ட இடர் வீடமைப்பு செயற்றிட்டத்தின் (இவீசெ) செயலாற்றமும் மீளாய்விற்குரிய ஆண்டில் சீர்கேடடைந்தது. அடையப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை நியதிகளில் 1994 இன் 9,758 இலிருந்து 1995 இல் 1,047 ஆக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. இதைப்போல, இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட வீடமைப்பு அலகுகள் 1994 இன் 10,109 இலிருந்து 5,155 இற்கு வீழ்ச்சியடைந்தது. வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் ஏற்பட்ட பின்னடைவு பல காரணங்களினால் ஏற்பட்டது. முதலாவதாக, தேவையான நிலங்களைக் கொள்வனவு செய்தலிலும், கண்டு பிடிப்பதிலும் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக புதிய வீடமைப்பு செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதில் ஓர் தாமதம் இருந்தது. இரண்டாவதாக, இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் நிலவிய சீமெந்தின் கடுமையான வழங்கல் பற்றாக்குறைகள் காரணமாக கட்டட நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தடைப்பட்டன. மூன்றாவதாக, அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான நடவடிக்கைகளை நிதியங்களின் கிடைக்கத்தக்க தன்மை இல்லாமை கட்டப்படுத்தின.

தேர்தல் தொகுதி ஒன்றுக்கு 100 வீடுகள் அமைக்கும் நிகழ்ச்சித் திட்டம், யாழ்ப்பாணம்,

கிளிநொச்சி, மன்னார் முல்லைத்தீவு மாவட்டங்கள் தவிர்த்து நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், வீடமைப்பு நிர்மாண வேலைகளுக்கு 10,932 குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டதுடன், இவற்றில் 1,574 குடும்பங்கள் அவற்றின் வீடமைப்பு அலகுகளைப் பூர்த்திசெய்தனர். இதுசார்பாக மொத்தச் செலவு ரூ. 1,050 இலட்சமாக விளங்கியது. இதேவேளை 1995 இல் குறைந்த நடுத்தர வருமானமுள்ள குடும்பங்களுக்காக நகர்புறப் பகுதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட கூட்டு ரீதியான வீடமைப்பு அலகுகளின் எண்ணிக்கையும், பெறுமதியும் 1994 இன் பூர்த்திசெய்யப்பட்ட 284 அலகுகளுடனும் செலவு ரூ. 2,110 இலட்சத்துடனும் ஒப்பிடுகையில் 323 அலகுகளாகவும், ரூ. 1,540 இலட்சமாகவும் விளங்கியது.

பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தைப் (பெவீநி) பொறுத்த மட்டில் கட்டிடப் பொருட்கள், பொருத்தமான நிலம், வீடமைப்புக் கடன்கள் என்பனவற்றை உதவியாகப் பெறுவதற்கு நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள 1,410 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டன. மீளாய்விற்குரிய ஆண்டில் 48 வீடமைப்பு அலகுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், ரூ. 74 இலட்சம் கொண்ட வீடமைப்புக் கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அதேவேளை, பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி நம்பிக்கை நிதியம், மகாவலி பொருளாதார முகவர் போன்ற பல ஏனைய முகவர்களும் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களைத் தனித்தனியாக நிறைவேற்றின. பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி நம்பிக்கை நிதியத்தின் உதவியுடன் பூர்த்தி செய்யப்பட்டதும் தரமுயர்த்தப்பட்டதுமான வீடமைப்பு அலகுகளின் எண்ணிக்கை வழங்கப்பட்ட உதவியை, அடிப்படையில் சுய-உதவித் தத்துவங்களில், பங்குபற்றுவோரின் அனுபவமின்மை காரணமாக எதிர்பார்ப்புக்களின் கீழ் வீழ்ச்சியடைந்தது. எனினும், இத் திட்டத்தின்கீழ், 1995 இல் அமைக்கப்பட்ட அலகுகளினதும், தரமுயர்த்தப்படட அலகுகளினதும் எண்ணிக்கை 1994 இன் முறையே 182 புதிய வீடமைப்பு அலகுகள், தரமுயர்த்தப்பட்ட 372 அலகுகளுடன் ஒப்பிடுகையில் முறையே 136 ஆகவும், 95 ஆகவும் விளங்கியது. மீளாய்விற்குரிய ஆண்டில், மகாவலி பொருளாதார முகவர் (மபொமு) மகாவலித் திட்டங்கள் பீ.சீ.ஜீ.எச்.எல் என்பவற்றில் 1994 இன் 2,225 அலகுகளுடன் ஒப்பிடுகையில் 1,189 வீடமைப்பு அலகுகளைப் பூர்த்திசெய்தன.

முன்னைய ஆண்டைப் போலவே, வீடமைப்புக் கடன்கள் இரு அரச வங்கிகள், அரச ஈட்டு முதலீட்டுவங்கி (அஈமுவ), தேசிய அபிவிருத்தி வங்கி (தேஅவ), வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (வீஅதிகூ), தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (தேகாகூ) கூட்டுறவு கிராமிய வங்கிகள் (கூகிவ) என்பவற்றால் நாடு பூராவும் பகிர்ந்தளிக்கப்பட்டன. அஈமுவ ஆல் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 46 சதவீதத்தால் 6,463 இற்கு அதிகரித்திருக்கையில் கடன் பகிர்ந்தளிப்புக்களின் பெறுமதி 16 சதவீதத்தால் ரூ. 8,750 இலட்சத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, 1995 இல் வீடமைப்பு நிர்மாணத்திற்காக மக்கள் வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 1994 இன் 9,189 இலிருந்து 16,026 இற்கு பெருமளவில் அதிகரித்ததுடன் வீடமைப்புக் கடன்களின் மொத்தப் பெறுமதி 1994 இன் ரூ. 3,350 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 6,900 இலட்சத்திற்கு இருமடங்கிற்கும் மேலாக அதிகரித்தது. வீடமைப்புக் கடன்களின் ஒரு பெரும் மூலமான வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் 4,539 விண்ணப்பதாரர்களுக்கு ரூ. 5,550 இலட்சம் கொண்ட கடன் வசதிகளை வழங்கியது. இதேவேளை தேசிய சேமிப்பு வங்கி (தேசேவ) 1995 இல் 948. விண்ணப்பதாரர்களுக்கு ரூ. 2,390 இலட்சம் பெறுமதியான வீடமைப்புக் கடன்களை 1994 இன் 1,022 விண்ணப்பதாரர்களுக்கு ரூ. 2,410 இலட்சம் பெறுமதியான கடன்களுக்கெதிராக வழங்கியது.

### நகர அபிவிருத்தி

நகர அபிவிருத்தி அதிகாரசபை (நஅஅ) தனியார்துறை பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு கட்டாயமான தேவையான நகரஉட்கட்டமைப்புக்கள் மற்றும் அதுசார்ந்த பணிகளை விரிவாக்குவதற்கும் புனருத்தாபனம் செய்வதற்குமாக ரூ. 5,510 இலட்சம் கொண்ட தொகையை வழங்கியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முக்கியமாக பத்தரமுல்ல நிருவாகக் கட்டடத் தொகுதியின் கீழான தொழிற்பாடுகளில் அநேகமானவை பூர்த்தியடைந்ததன் முக்கிய காரணமாக 1995 இல் நஅஅ ஆல் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் 48 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. நகர உட்கட்டமைப்புக்களை விரிவாக்குவதில் முக்கிய நிறுவனமாக சம்பந்தப்பட்டிருந்த நஅஅ ஆறு முக்கிய செயற்றிட்டங்களான நிருவாகச் செயற்றிட்டங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங்கள், காணி வங்கிகள், வாடிக்கையாளர் செயற்றிட்டங்கள் , பட்டின முன்னேற்ற

செயற்றிட்டங்கள், வர்த்தகக் கட்டடத் தொகுதிச் செயற்றிட்டங்கள் என்பனவற்றின்கீழ் அதன் தொழிற்பாடுகளை இயக்கியது.

நகர அபிவிருத்தியிலான மொத்த முதலீட்டில் 58 சதவீதம் அல்லது ரூ. 3,210 இலட்சம் வாடிக்கையாளர்களின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் மீதானவையாகும். இதில், அனேகமாக 66 சதவீத (ரூ. 2,120 இலட்சம்) ஆஅவ மற்றும் இலங்கை அரசால் நிதியிடப்பட்ட நகர அபிவிருத்தித்துறைச் செயற்றிட்டங்களுக்காக செலவிடப்பட்டது. இச்செயற்றிட்டம் பிராந்திய வளர்ச்சி நிலையங்களாகவும், வெளிநாடு மற்றும் உள்நாட்டிலிருந்து கூடிய முதலீட்டை கவர்வதற்காக அத்தியாவசிய வீதி அமைப்பு வசதிகளுடன் இரண்டாந்தர மாநகரங்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களை அபிவிருத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மீளாய்விற்குரிய ஆண்டில், காலிமுகபசுமை அபிவிருத்தி செயற்றிட்டம், மாதிவெல வீடமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டம் என்பன மேற்கொள்ளப்பட்டதுடன், ஒவ்வொன்றின் மீதும் ரூ. 200 இலட்சம் செலவழிக்கப்பட்டது. பத்தரமுல்ல நிருவாகத் தொகுதியின் நிர்மாணத்திற்காக ரூ. 1,770 இலட்சம் கொண்ட தொகை செலவிடப்பட்டது. வர்த்தக கட்டடத்தொகுதிகள், நகர முன்னேற்ற செயற்றிட்டங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் என்பனவற்றினை நிர்மாணிப்பதின் பேரில் ரூ. 290 இலட்சம் நஅச ஆல் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ரூ. 220 இலட்சம் கொண்ட தொகை அபிவிருத்தி செய்யப்படாத அல்லது பயன்படுத்தப்படாத காணிக்கான கொள்வனவில் செலவழிக்கப்பட்டது.

நகர உட்கட்டமைப்புக்களை அமைப்பதற்கான இம்முயற்சிகளின் மத்தியிலும், நகரப்புறங்களில் வழங்கப்படும் சேவைகளின் தரம் மற்றும் திருப்திபற்றி அதிகரித்துவரும் அக்கறை ஒன்று இருந்தது. பொறுப்புவாய்ந்த சபைகள் தேவைப்பட்ட வீதத்தில் சேவை வழங்கும் இயலளவை விரிவாக்குவதில் வெற்றி பெறாததுடன், இவை திடீர் வெள்ளப்பெருக்குக் கால்வாய், வெள்ளத்தின் நிகழ்வு வெள்ள மட்டங்கள், கழிவுப் பொருள் அகற்றும் பணிகள் போன்றவற்றைப் பொறுத்தமட்டில் கடுமையான பிரச்சினைகளை உருவாக்கியது. இது எதிர்காலத்தில் நகர நிலையங்களை அபிவிருத்தி செய்வதில் கூடிய தாக்கமுள்ள முறையான திட்டமிடல் உத்திகளை கொண்டிருக்க வேண்டியதன் தேவையைத் தெளிவாக வலியுறுத்தியது.

## நீர் வழங்கலும் ஆரோக்கியமும்

நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கிய வசதிகளை விரிவாக்கல் முன்னேற்றல் சார்பான தொழிற்பாடுகள் முக்கியமாக தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையின் (தேநீவவச) அதிகாரத்தின்கீழ் இருந்தன. தேநீவவச ஆல் வழங்கப்பட்ட நீர் இணைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 1995 இல் 10 சதவீதத்தால் 28,680 இற்கு அதிகரித்தது. மீளாய்விற்குரிய ஆண்டில் நகரத்துறைக்கு வழங்கப்பட்ட நீர் வழங்கல் வசதிகள் 10 சதவீதத்தால் விரிவடைந்திருக்கையில், கிராமியத்துறைக்கான அவ்வசதிகள் 11 சதவீதத்தால் அதிகரித்தன. இதனால், வழங்கப்பட்ட குழாய் நீரின் அளவு 1994 இன் 2,490 இலட்சம் கன லீற்றர்களிலிருந்து (அகலீ), 1995 இல் 2,730 இலீற்றருக்கு அதிகரித்து 10 சதவீத முன்னேற்றத்தைக் கொண்டிருந்தது. தேநீவவச இன்படி சுகாதாரமான குடிநீருக்கான (குழாய் நீர்முறை, பாதுகாக்கப்பட்ட தோண்டிய கிணறுகள், குழாய்க் கிணறுகள்) வசதிகளுடன் நாடு நகர குடித்தொகையின் 89 சதவீதத்தையும் கிராமியக் குடித்தொகையின் 57 சதவீதத்தையும் நாடு 1995 இறுதியில் அடைந்தது. இவ்விதந்துரைப்பு கிராமியத்துறைக்கு நீர் வழங்கல் வசதிகளில் மேலும் விரிவாக்கத்திற்கான தேவை இருப்பதை விதந்துரைக்கின்றது.

நீர் வழங்கல், குறைந்தது செலவு மீட்கும் அடிப்படையில் நீர் வழங்கலின் ஓர் திறன்மிக்க கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக, தேவையான முக்கிய உத்திகளும் நிறுவனரீதியான சீர்திருத்தங்களுமாக நன்கமைந்த நிதியியல் நடைமுறைகள் பரந்த சமுதாயம் பங்குபற்றல் என்பன விளங்கின. 1995 இல் நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கியத்திற்கான மொத்த முதலீடு ரூ. 4 பில்லியனாக அமைந்தது. நீர்வழங்கல் செயற்றிட்டங்களின் புனருத்தாபனத்திற்கும் நிர்மாணத்திற்கும் தேவையான மூலவளங்களில் கிட்டத்தட்ட 60 சதவீதம் பஅஅ, ஆஅவ, ப.பொ.ஒ. நிதியம் போன்ற வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்டன. வெளிநாட்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நீர் வழங்கல் செயற்றிடடங்களாக கொழும்பு கிழக்கின் நகரங்களுக்கான நீர் வழங்கல், மாத்தறை நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கிய நிகழ்ச்சித் திட்டம், கொழும்பு தெற்கு நகரங்களின் செயற்றிட்டம், உடுநுவர-யட்டிநுவர செயற்றிட்டம் என்பன விளங்கின. கிராமிய துறைக்கான நீர்வழங்கல் பணிகளின் விரிவாக்கத்திற்குக் கூடிய முன்னுரிமை கொடுக்கப்பட்டது. பஅஅ ஆல் நிதியிடப்பட்ட சமூக

## அட்டவணை 5.13

### ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மாவட்ட ரீதியான செலவு 1994 – 1995

ரூபா பத்து இலட்சம்

| மாவட்டம்/செயற்றிட்டம் (ஆ) | வெளிநாட்டு உதவி மூலங்கள் | மதிப்பிடப்பட்ட செலவு | | | இது காலவரைக்கும் ஒன்று சேர்ந்த செலவு | | செலவு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வெளிநாட்டு உதவிக் கடப்பாடுகள் | உள்நாடு | மொத்தம் | 1994 முடிவில் உள்ளபடி (அ) | 1995 முடிவில் உள்ளபடி (இ) | 1994 ஆம் ஆண்டின் செலவு (அ) | 1995 ஆம் ஆண்டின் செலவு (இ) |
| 1. மாத்தறை | சீடா | 598.65 | 72.94 | 671.59 | 497.29 | 529.05 | 57.27 | 31.76 |
| 2. அம்பாந்தோட்டை | நோராட் | 1,330.00 | 50.00 | 1,380.00 | 893.99 | 967.79 | 60.53 | 73.80 |
| 3. நுவரெலியா | நெதர்லாந்து | 826.00 | 26.00 | 852.00 | 524.30 | 575.41 | 43.90 | 51.11 |
| 4. பதுளை | வே. அ. ப. நி./சீடா | 1,116.00 | 297.00 | 1,413.00 | 577.23 | 621.72 | 49.28 | 44.49 |
| 5. இரத்தினபுரி | நெதர்லாந்து | 627.00 | 64.00 | 691.00 | 308.68 | 350.47 | 27.10 | 41.79 |
| 6. மொனறாகலை | நோராட் | 1,156.00 | 57.00 | 1,213.00 | 5,110.46 | 596.87 | 67.98 | 85.42 |
| 7. கேகாலை | வே. அ. ப. நி. | 408.00 | 228.00 | 636.00 | 494.47 | 577.85 | 94.42 | 83.08 |
| 8. களுத்துறை | பினிடா (பின்லாந்து) | 397.00 | 120.00 | 517.00 | 414.89 | 469.01 | 9.91 | 54.12 |
| 9. கண்டி | சேர்மன் தொ. வ. | 436.00 | 35.00 | 471.00 | 104.37 | 128.57 | 26.90 | 24.20 |
| 10. கம்பகா | யப்பான் ப.கூ.மு. | 1,971.00 | 204.00 | 2,175.00 | 104.37 | 1,494.85 | 10.14 | 942.50 |
| 11. தெ. மா. கி. அ. செ. (ஈ) | ஆ.அ.வ. | 1,920.00 | 480.00 | 2,400.00 | 303.08 | 542.81 | 191.06 | 239.73 |
| 12. அநுராதபுரம் | சீடா | 804.00 | 141.80 | 945.80 | 64.50 | 82.06 | 34.36 | 17.56 |
| 13. புத்தளம் ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படை பணிகள் செயற்றிட்டம் | யுனிசெப் | 106.00 | 52.50 | 158.50 | 67.32 | 90.00 | 21.29 | 22.68 |
| 14. உலர்வலயம் பங்கேற்கும் அபிவிருத்திச் செயற்றிட்டம் | வே. அ. ப. நி/ சே. தொ. வ. | 578.00 | 285.83 | 863.83 | 80.45 | 128.94 | 51.17 | 48.49 |
| 15. நீர்ப்பாசனமும் சமூகஅபிலிருத்திச் செயற்றிட்டமும் | ஐ.ச.ஆ. | 347.91 | 74.09 | 422.00 | 9.02 | 14.72 | 9.02 | 5.70 |
| மொத்தம் | | 12,621.56 | 2,188.16 | 10,681.50 | 5,403.39 | 7,170.12 | 754.33 | 1,766.43 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டுள்ளது.
(இ) தற்காலிகமானவை.
(ஈ) தெ. மா. கி. அ. செ. – தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.
(உ) ஐ.ச.ஆ. – ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழு

மூலம் : நிதி, திட்டமிடல், இன விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு.

நீர்வழங்கல் ஆரோக்கியச் செயற்றிட்டம் சமூகத்தின் பங்குபற்றலுடன் கிராமியப் பகுதிகளில் நீர்வழங்கும் பரப்பை விரிவாக்கும் நோக்குடன் இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்செயற்றிட்டம் ஆரம்பத்தில் இரத்தினபுரி, பதுளை, மாத்தளை ஆகிய இடங்களில் நிறைவேற்றப்பட்டது. இச்செயற்றிட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 219 கிராமிய நீர் வழங்கல் ஆரோக்கியச் செயற்றிட்டங்கள், 407 பாடசாலை நீர்வழங்கல் ஆரோக்கியச் செயற்றிட்டங்கள், 17 சிறு நகர நீர் வழங்கல் ஆரோக்கியச் செயற்றிட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ஒகிஅநிதி) 1979 இல் ஆரம்பித்தது. இந் நிகழ்ச்சித் திட்டம் கிராமப் பகுதிகளில் மக்களின் பொதுவான வாழ்க்கைத் தரங்களை அதிகரிப்பது மற்றும் பொருளாதாரச் சந்தர்ப்பங்களை விரிவாக்குவது, கூடிய சமமான வளர்ச்சிகளை முன்னேற்றல்மூலம் மாவட்டத்தினுள்ளேயும், மாவட்டங்களுக்கிடையேயுமான வேற்றுமைகளைக் குறைப்பது, விசேடமாக உள்ளூர்த் தேவைகளைச் சந்திப்பது மற்றும் உள்நாட்டு தூண்டுதலை ஊக்கப்படுத்தி அபிவிருத்தி முயற்சிகளை செறிமைப்படுத்துவது என்பவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டம் வெளிநாடுகளாலும் வெளிநாட்டு நிறுவனங்களாலும் நிதியிடப்பட்டது.

ஒகிஅநி 1995 இறுதிவரை 14 மாவட்டங்களை அடக்கிய 15 நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டுள்ளது. இவ்வாண்டில் அநுராதபுரம் ஒகிஅநி திட்டத்தின் முதலாம் கட்டமும், மாத்தறை ஒகிஅநி திட்டத்தின் நான்காம் கட்டமும் முடிவடைந்ததுடன், அநுராதபுரம் ஒகிஅநி திட்டத்தின் இரண்டாம் கட்டமும் மாத்தறை ஒகிஅநி திட்டத்தின் ஐந்தாம் கட்டமும் 1995 யூலையில் ஆரம்பித்தன. 1995 இல் ஒகிஅநி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான நிதியங்களின் மொத்தப் பயன்பாடு ரூ. 17,660 இலட்சமாக விளங்கியதுடன், இது முன்னைய ஆண்டின் மொத்தச் செலவைவிட ரூ. 1 பில்லியனுக்கும் மேல் அதிகரித்திருந்தது. இது இவ்வாண்டில் கம்பகா ஒகிஅநி திட்டத்தின் மீது செலவழிக்கப்பட்ட ரூ. 9,430 இலட்சம் தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்மீது செலவழிக்கப்பட்ட ரூ. 2,400 இலட்சம் கொண்ட கணிசமான அதிகரிப்புக்களால் ஏற்பட்டதாகும். நிதி திட்டமிடல் இன உறவு அலுவல்கள் தேசிய நல்லிணக்க அமைச்சின்படி இந்நிகழ்ச்சித் திட்டம் இவ்வாண்டுக்கான நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்குகளின் 90 சதவீதத்தைச் செலவிட்டது.

## சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம்

அரசின் முக்கிய வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டமான சமுர்த்தி 1995 யூனில் அதன் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் எண்ணக்கருவானது, வறிய மக்களின் நிலைமைகளை முன்னேற்றல், பொருத்தமான தலையீடுகளூடாக கிராமிய உற்பத்தித் தளத்தை பலப்படுத்தல், மனிதவள அபிவிருத்தி, தற்போது இருக்கும் முறைகளிலிருந்து இதுவரை நன்மை பெறாத கிராமிய மக்களுக்கு உதவும் பொருட்டு ஓர் மாற்றீட்டு வங்கி முறையை அபிவிருத்தி செய்தல் என்பன மூலம் குடும்ப அலகுடன் தொடங்கி தேசிய மட்டத்தில் வறுமையை ஒழிப்பதாகும்.

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் வருமான அளவின் மிகத் தாழ்ந்த மட்டத்தில் உள்ளவர்கள் எனக் கருதப்படும் 12 இலட்சம் குடும்பங்களை உள்ளடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி 1995 இறுதியில் அத்திட்டத்தின்கீழ் 1,213,535 குடும்பங்கள் நன்மைபெற்றன. இத்திட்டத்தின்கீழ் உள்ளடக்கப்பட்ட மொத்தக் குடும்பங்களின் 67 சதவீதத்திற்குச் சமமான பயனை எதிர்பார்க்கும் வறிய குடும்பங்களுக்கு மாதாந்த வருமானம் ரூ. 1,500 இனை உறுதிப்படுத்துவதற்காக வருமானக் குறைநிரப்பு தொகைகள் இரண்டு கட்டங்களில் (ரூ. 1,000, ரூ. 500) பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டம் தனியாள், இரு உறுப்பினர் குடும்பங்களுக்கு மாதமொன்றிற்கு முறையே ரூ. 100, ரூ. 200 ஐயும் விளங்கியது. இந்நிகழ்ச்சித் திட்டத்தை 6 மாதகாலப்பகுதிக்கு நிறைவேற்றுவதற்கான மொத்தச் செலவு ரூ. 25,510 இலட்சமாக விளங்கியது. எல்லா சமுர்த்தி நன்மைபெறுநர்களும் அவர்கள் பெற்ற குறைநிரப்பு தொகையின் ஓர் பகுதியைச் சேமிக்குமாறு ஊக்கப்படுத்தப்பட்டனர். 1995 இல் இத்திட்டத்தின்கீழ் மொத்தமாக ரூ. 4,270 இலட்சம் சேமிக்கப்பட்டது.

1995 இல் சமுர்த்தி அதிகாரசபை சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன், அது 1996 சனவரி இறுதியில் நிறுவப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வதிகாரசபை, இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நிறைவேற்றுநராகவும் நிர்வாகியாகவும் தொழிற்படும். இது, தேசிய மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றத்தை அமுலாக்குவதற்கும் கண்காணிப்பதற்கும்

பொறுப்பான மாவட்ட சமுர்த்திக் குழுக்களூடாக அதன் தொழிற்பாடுகளை நடாத்தும். இச்செயற்றிட்டம் ஆரம்பமானதிலிருந்து, சமுர்த்தி நலன்பெறுபவர்களை அடையாளம் காண்பதன் மூலம் ஏனைய அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு உதவும் வகையில் 22,861 "சமுர்த்தி நியாமக்க" அல்லது வழிகாட்டிகளும், 1,196 சமுர்த்தி முகாமையாளர்களும் நியமிக்கப்பட்டனர். ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலும் அப்பகுதியில் கிடைக்கத்தக்க மூலவளங்களை அடிப்படையில் பொருத்தமான செயற்றிட்டங்களை இனங்காண்பதற்கும், அமுலாக்குவதற்கும் ஒரு சமுர்த்தி (பணிக்குழு) நியமிக்கப்பட்டது. 1995 இறுதிவரை மொத்தமாக 12,168 பணிக்குழுக்கள் நிறுவப்பட்டிருந்தன.

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், கிராமியத்துறையில் வருமான மட்டங்களை அதிகரித்தல், வேலைவாய்ப்பு வசதிகளை விரிவாக்கல், கிராமிய சேமிப்புக்கள் மற்றும் வங்கித் தொழிற்பாடுகளை முன்னேற்றல், கிராமியத்துறையின் பொருளாதார சமூக வீத அமைப்பு வேலைகளை அபிவிருத்தி செய்தல் என்பன மீது கூடிய கவனம் செலுத்தப்பட்டது. இவ்விலக்குகளை அடையும் பொருட்டு, ஐந்து முக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் வரையப்பட்டன. கிராமிய வருமான மட்டங்களை உயர்த்தும் நோக்கில், சிறிய நடுத்தர வியாபார செயற்றிட்டங்கள் (ஒவ்வொரு வலயப் பகுதியிலும் குறைந்தது இரண்டு செயற்றிட்டங்கள்), சுய வேலைவாய்ப்பு செயற்றிட்டங்கள் மற்றும் மேலதிக வருமானம் பிறப்பாக்கல் (தையல் இயந்திரங்கள், கால்நடை அபிவிருத்தி போன்றனவற்றை வழங்கல்) என்பன அமுல்படுத்தப்படவுள்ளன. இச்செயற்றிட்டங்கள், சமுர்த்தி நம்பிக்கை நிதியம், வர்த்தக வங்கிகள் போன்றவற்றிலிருந்தான நிதியங்கள் மூலம் நிதியிடப்படவுள்ளன. சேமிப்புக்கள், முதலீடு மற்றும் கிராமிய தொழில் முயற்சி, தேர்ச்சிகள் என்பனவற்றை முன்னேற்றுவதற்காக இன்னோர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்படும். இச்செயற்றிட்டத்தின்கீழ் சமுர்த்தி வங்கி மன்றம் மற்றும் கிராமிய வங்கிச் சங்கங்கள் நிறுவப்படும். கிராமிய பொருளாதார சமூக வீதி அமைப்புக்களை முன்னேற்றும் பொருட்டு இரு முக்கிய நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படும். பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், 1995 இல் மொத்தம் 11,306 சிறிய அளவிலான பங்குபற்றும் செயற்றிட்டங்கள், நீர்ப்பாசனம், நீர் வழங்கல், வீதி மற்றும் கட்டட நிருமாணம் என்பனவற்றில் சமுத்தி பெறுநர்களால் பொறுப்பேற்கப்பட்டன. இது சார்பான மொத்த அரச முதலீடு ரூ. 1,140 இலட்சமாக விளங்கியது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல சத்தூட்டற்றிட்டங்கள் அமுலாக்கப்படவிருப்பதுடன் தொழிலாளர் சந்தைக்காக இளைஞர்களை தயார்படுத்துவதற்கான தொழில் செய்தி நிலையமும் அமைக்கப்படவிருக்கிறது.